Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

(C704)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 26 திங்கட்கிழமை (09.05.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 222

## வலி. வடக்கில் மீள்குடியமர்வு; மேலும் பல பகுதிகளில் இன்று ஆரம்பம்

(தெல்லிப்பளை)

வலி. வடக்கில் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவிலுள்ள 9 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்று மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இம்மீள்குடியமர்வின் ஆரம்ப நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வில் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இன்று நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன் கூடுமாறு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கேட்டுள்ளார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் மீள்குடிமயரவுள்ள பிரிவுகளின் கிராம சேவையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜே/225 கொல்லங்கலட்டி, (11 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் நற்பெயருக்கு களங்கம்; வெளிவிவகார அதிகாரிகளே காரணம்

### பேராசிரியர் ரொஹான் குணரத்தின கூறுகிறார்



(கொழும்பு)

வெளிநாட்டமைச்சின் கட்டமைப்பு முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென பயங்கரவாத ஆய்வு தொடர்பான சர்வதேச நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரத்தின வலியுறுத்தியுள்ளார்.

புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலத்தில் வெளிநாட்டமைச்சு சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணத் தவறியமையே இன்றைய சிக்கல்களுக்குக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு வருகிறது இந்தியக் குழு; ஐ.நா.வுக்கு இலங்கையின் பதில்!

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை குறித்த விடயங்களைக் கையாள்வது எப்படி என்பது பற்றிய மந்திராலோசனை கலப்பதற்காக இந்திய உயர்மட்டக் குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது. மேற்படி அறிக்கைக்கு உயர் இராஜதந்திர மொழியில் பதில் வழங்கும் பொருட்டு இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் தயராகி வருகின்றன.**

இத்தயார்படுத்தலின் ஒரு அம்சமாகவே இந்திய உயர்மட்ட தூதுக்குழுவின் இலங்கை விஜயம் அமையவிருக்கிறது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் இலங்கை அரசுக்கு அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தத்தில் இருந்து எப்படி மீண்டுகொள்வது என்பது குறித்தும், இந்த அறிக்கைக்கான இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பதிலை சர்வதேச நியமங்களுக்கமைவாக எவ்வாறு வரைபு செய்வது என்பது குறித்தும் மேற்படி இந்திய உயர்மட்ட இராஜதந்திரிகள் இலங்கை அரசுடன் ஆலோசனை கலக்கவுள்ளனர்.

இவ்வார இறுதியில் கொழும்புக்கு வருகை தரவிருக்கும் இக்குழுவில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ், படைத்துறைச் (11 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதல்; வவுனியாவில் பரபரப்பு

(வவுனியா)

வவுனியா - குருமண்காட்டுப் பகுதியில் உள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மீது நேற்றுக் காலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா மன்னார் வீதி, யூசி குவாட்டர்ஸ் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வரும் வீ.ரங்கநாதன் என்பவரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டு மதிலுக்கு மேலாக எறியப்பட்ட கைக்குண்டு வீட்டின் முன்புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது வீழ்ந்து வெடித்துள்ளது. இந்தத் தாக்குதலில் மோட்டார் சைக்கிளும், வீட்டு ஜன்னல்களும் சேதமடைந்துள்ளன. பாடசாலையில் இடம்பெற்ற பிரச்சினை ஒன்றிற்காக நடத்தப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியைக் குலைத்தால் கடும் நடவடிக்கை

### யாழ். தளபதி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிற்கும், வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு மீது சாடல்; அம்பலமாகும் இரகசியங்கள்

### கடும் தொனியில் பேசுகிறார் அருண் தம்பிமுத்து

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு "தருஸ்மனின்" அறிக்கைக்கு ஆதரவாகப் பேசுவதனாலோ அல்லது அந்த அறிக்கையை வரவேற்று கருத்துகளை வெளியிடுவதனாலோ தமிழ் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடைக்கப்போவதில்லை. மாறாக, அரசுடன் இணைந்து கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டமொன்றைப் பெற்றுக்கொடுப்பதே காலத்தின் தேவை. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தமிழ்த் தேசிய அரசியல் நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழ் மக்களுக்கு எந்தப் பலனும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் சர்ச்சைக்குரிய தருஸ்மன் அறிக்கையைப் பயன்படுத்தி



அரசியல் இலாபம் தேடுவதற்கு கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான அமைப்பாளர் அருண் தம்பிமுத்து கூறியுள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ **உள்ளே கல்வி முரசு**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## இனங்களுக்கிடையில் நல்லிணக்கம்; அரசுக்கு இப்போது நல்ல வாய்ப்பு


### இது பிரித்தானியாவின் ஆலோசனை

(லண்டன்)

இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தற்போதைய சந்தர்ப்பத்தை இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சரும், பிரதி வெளிவிவகார அமைச்சரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

பிரித்தானியாவின் நாடாளுமன்ற பொதுச்சபையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான, காத்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேணடும் என பிரித்தானியா மீண்டும் (12 ஆம் பக்கம் பார்க்க)



# சேலை அலங்கார பயிற்சி நிலையம் அடுத்தவாரம் சங்கானையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கைத்தறிச் சாறிகளை உற்பத்தி செய்வது சாறிகளுக்கான சித்திர அலங்கார வேலைப்பாடுகளுக்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களை இஷாரா காமன்ஸ் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பில், கைத்தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படவுள்ள சாறிகள் தொடர்பாகவும், அவற்றுக்கு சீகுயின்ஸ் மூலம் சித்திர வேலைப்பாடுகளை இணைப்பது தொடர்பாகவும் துறைசார்ந்தோரிடம் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.பயிற்சி நெறிகளை வழங்கும் வகையில் சங்கானையில் பயிற்சி நிலையம் ஒன்று மகேஸ்வரி நிதியத்தினூடாக அமைக்கப்படுவதற்கும், இப்பயிற்சி நெறிக்கு முதற்கட்டமாக 200 பேரை உள்வாங்குவதற்கும் ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவு ஆலைகளிலும் சாறிகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றிற்கு அலங்கார வேலைப்பாடுகளைச் செய்த பின்னர் கொழும்பில் அறிமுகம் செய்யப்பட்டு பின் விற்பனை செய்வதுடன், சிறந்த சந்தை வாய்ப்பினை பெற முடியுமெனவும் இதன் மூலம் குடாநாட்டில் பலரும் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியுமென்றும் துறைசார்ந்தோர் தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையின் மூலம் குடாநாட்டில் கைத்தறி உற்பத்தியாளர்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடையும் அதேவேளை இவ்வுற்பத்திகளுக்கு சிறந்த சந்தைவாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும்.இதனிடையே சங்கானையில் அமையப் பெறவுள்ள பயிற்சி நிலையத்திற்குச் சென்ற இக் குழுவினர் கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப் பணிகள் குறித்து விளக்கியதை அடுத்து அடிப்படைத் தேவைகள் உடனடியாக சீர்செய்து தரப்படும் எனவும், இப்பயிற்சி நிலையம் எதிர்வரும் 13ம் திகதி திறந்து வைக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.இச்சந்திப்பில் நுகேகொடையைச் சேர்ந்த இஷாரா காமன்ஸ் உரிமையாளர் திருமதி இஷாரா ஹரிச்சந்திரா உள்ளிட்டோர் கலந்து கொண்டர்.



யாழ். மரியாயின் சேளை பக்திச் சபையின் 175 ஆவது ஆண்டு பவள விழாவின் பக்தி முயற்சியாக திருச் செபமாலைப் பேரணி நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள மரியாயின் சேனையின் பக்திச்சபைகள் தங்கள் பிரசீடியக் கொடிகளைத்தாங்கியவாறு பேரணியில் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# கரப்பந்து சுற்றுப்போட்டி

தினமுரசு ஊடக அனுசரணையுடன் Aviva NDB காப்புறுதி நிறுவனத்தின் ஆதரவுடன் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று குழு B இற்கான போட்டிகள் நடைபெற்றன. தெரிவுப்போட்டியில் நாயன்மார்கட்டு பாரத் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் காலிறுதிக்கு முன்னேறியது மற்றைய போட்டியில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை மட்டுவில் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றிகொண்டது.

அரையிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதிய ஆவரங்கால் இந்து விளையாட்டுக்கழகம் 21-25, 25-21, 25-22, 25-20 என்ற செற்க் கணக்கில் வெற்றிபெற்று எதிர்வரும் 14.05.2011 சனிக்கிழமை நடைபெறும் இறுதிப்போட்டியில் ஆவரங்கால்மத்திய விளையாட்டுக்கழகத்தை சந்திக்கிறது.

# எழில் நிறைந்த புல்லுக்குளத்தை மாசு படுத்தும் விசமிகள் யார்?



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள புல்லுக்குளம் சில விசமிகளின் செயற்பாட்டினால் அதன் அழகு பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது.

புல்லுக்குளத்தின் அருகே அமைக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்து கொண்டு அங்கு அவர்கள் மதுபானங்களைப் பாவித்து அதன் வெற்றுப்போத்தல்களை அக்குளத்திலேயே போட்டுச் செல்கின்றனர். அத்துடன் சாப்பாட்டுப் பொருகளின் வெற்றுப் பைகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் ஆகியவற்றை அக்குளத்திலேயே போட்டுச் செல்கின்றனர்.

இதனால் யாழ்.நகருக்கு வரும் பயணிகள் முதல் ஏனையவர்கள் அவ்வழியால் வரும் வேளை ஓய்வெடுத்துச் செல்லும்போது அவற்றைப் பார்க்கும்போது பெரும் சினத்தை ஏற்படுத்துகின்றது.

அண்மைய காலத்தில் யாழ். மாநகர சபையினால் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்ட இக்குளம் இப்படியான விசமிகளின் செயற்பாடுகள் யாழ். நகர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மாணவர்கள் தங்கள் கற்றல் செயற்பாடுகளுக்கென யாழ்.பொதுநூலகம் மற்றும் பொலிஸ் நிலையம் என்பன அருகில் உள்ள இவ்விடத்தில் இப்படியான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)



தனியார் போக்குவரத்து அமைச்சர் கி.பி.ரத்னாநயக்க நேற்றையதினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள டிப்போ சந்தியில் வைத்து ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக கையெழுத்து வாங்குவதைக் காணலாம். (29)


**மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம்**
**மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கிடையே நடாத்தும்**

**கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி (செற் அப்)**

மைதானம்: மட்டுவில் வடக்கு மோகனதாஸ் வி.க.மைதானம்

காலம்: 07,08.05.2011 (சனி மற்றும் ஞாயிறு)

நேரம் : காலை 8:00 தொடக்கும் மாலை 6.00 மணிவரை

**பங்கு பெறும் கழகங்கள்**

| குழு A | குழு B |
| --- | --- |
| யாழ். பல்கலைக்கழக அணி | ஆவரங்கால் மத்திய வி.க. |
| மட்டுவில் வளர்மதி வி.க. | கைதடி வளர்மதி வி.க. |
| நாயன்மார்கட்டு பாரதி வி.க. | நீர்வேலி வி.கழகம் |
| காங்கேசன்துறை ஐக்கிய வி.க. | உடுப்பிட்டி நவஜீவன் வி.க. |
| ஆவரங்கால் இந்துஇளைஞர் வி.க. | அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.க. |
| அச்சுவேலி ஸ்ரார் வி.க. | கச்சாய் ஸ்ரீ முருகன் வி.க. |

கரப்பந்தாட்ட ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் மோகனதாஸ்
விளையாட்டுக் கழகம்.

அனுசரனையாளர்,/AVIVA NDB காப்புறுதி நிறுவனம்.

ஊடக அனுசரனை தினமுரசு


# கரணவாயில் அசிட் வீச்சு

(கரணவாய்)

கரணவாய் கிழக்குப் பகுதியிலுள்ள ஒருவரது வீட்டிற்கு இனந்தெரியாத நபர்கள் சிலர் அசிட் போத்தல்களை வீசியுள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள உச்சில் அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வீட்டிற்கு இந்த இனந்தெரியாத செயற்பாடுகள் நேற்று அதிகாலை ஒருமணியளவில் இடம் பெற்றுள்ளதாகவும் இதில் குறித்த வீட்டு உரிமையாளருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (18)


உ
அம்பிகை துணை

**31ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்**



ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞரும், நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை முன்னாள் உபசெயலாளருமான

"பாவாணர்", "கலைஞானச்சுடர்"

**டானியல் தேவமதுரம்**

அன்னை மடியில்
08.11.1946

அம்பிகை அருளடியில்
09.04.2011

09.04.2011 அன்று இறைபதம் இணைந்த எமது குடும்பத்தலைவர் டானியல் தேவமதுரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.05.2011 சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றன. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 09.05.2011 இன்று திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாங்குறு வதனமும் –பவளவாய்சிரிப்புமாய்
பக்திமை பொதிந்த புலவர் பெருமகனே!
தீங்கவிகள் பாசுரங்கள் தேமதுரத் தமிழினிலே
திக்கெட்டும் துதிபாட தரணிதனைத் துறந்தீரோ?
ஏங்குகிறோம் என்றும் எண்ணங்கள் அலைமோத
எம்முயிர்த் தந்தைபோல் எமக்கு எவருளரோ?
நீங்காத சோதியாய் நின்னாத்மா நிறைவுடனே
நீள்சடையான் பாகத்தாள் நிறைகழலில் நித்தியமே!

கவியாக்கம் : "தேவமதுரன்"
தே. சுகிர் நாகேந்திரா

இல.7, பூமகள் வீதி, அரியாலை மேற்கு.

இங்ஙனம் : குடும்பத்தினர்.

(R/032)

நாம் செய்யும் பணிகளில் வித்தியாசம் பாராட்ட வேண்டியதில்லை. எந்தப் பணியையும், கடமை உணர்ச்சியுடன் செய்ய வேண்டியதுதான் முக்கியம். அதுவே இறைவனுக்கு உகந்ததாகும்.

-சின்மயானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# இந்திய வீட்டுத்திட்டம்

யுத்தப்பாதிப்புக்குள்ளான யாழ்.குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு அங்கிருந்த கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட்டபின் மக்கள் படிப்படியாகக் குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள்.

அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுவரும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் அடிப்படையானதும், முக்கியமானதுமான வீட்டுப் பிரச்சினையே பூதாகாரமாக உருவெடுத்திருப்பதை அனைவரும் அறிவர்

இந்த மக்களின் வீட்டுப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்திய அரசும், உலக வங்கியும் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்திய அரசு தனது நிதி உதவியுடன் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசுக்கு வாக்குறுதி அளித்த நிலையில் அதற்கான ஒப்பந்தங்களிலும் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், நிதிஅமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் ஏற்கனவே கலந்துரையாடி முடிவுசெய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தப்பாதிப்புக்களுக்கான மக்கள் எவற்றை எல்லாம் இழக்க முடியுமோ அவற்றை எல்லாம் இழந்து வெறும் நடைப்பிணங்களாகவே நடமாடி வருகின்றார்கள்.

இத்தகையவர்களில் அதிஉச்சப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு இத்திய நிதிஉதவியுடனான வீட்டுத்திட்டத்தில் முதற்கட்டமாக 7400 வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதில் அமைச்சர் டக்ளஸ் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவருவதை அவரது நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலுமிருந்து காணக்கூடியதாக உள்ளது.

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் வறுமைக்கோட்டின் அடிப்படையில் இடம்பெயர்ந்து வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்திய வீட்டுத்திட்டத்தின் முதற்கட்ட ஆரம்பப்பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதற்கென இந்தியப் பொறியியலாளர் குழுவொன்று 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய மத்திய அரசின் மூன்று மூத்த அமைச்சர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அளித்த வாக்குறுதிகள் முன்னேற்றம் கண்டு வரும் நிலையில் இவ்வீட்டுத்திட்டம் வெறும் கண்துடைப்பு என்றெல்லாம் பல்லவி பாடியவர்களுக்குப் பலத்த ஒரு அடியாகும்.

எடுத்ததற்கெல்லாம் இந்தியாவின் ஆலோசனைகளுக்கு அடிக்கடி அங்கு செல்பவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவுடன் ஏதாவது பேசுகிறார்களா? என்பது சந்தேகத்துக்குரியதொன்றாகவே தெரிகின்றது.

-ஆசிரியர்-

# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் காணி முறைப்பாடுகள் அதிகம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் காணி தொடர்பான வழக்குகளே அதிகளவில் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி நகரில் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் காணி தொடர்பான பிரச்சினைகளே அதிகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகக் காணி உரிமையாளர்கள் அவற்றுக்கான சட்ட ஆவணங்கள் சரியான முறையில் பெற்றுக்கொள்ளாமை மற்றும் கைமாறிச் செல்லும் காணி உரிமையாளர்கள் சட்ட ஆவணங்களைச் சாியான முறையில் பெற்றுக்கொள்ளாமை போன்ற செயற்பாடுகளினால் இக்காணிப் பிரச்சினை ஏற்படுவதாகவும், குறிப்பாக ஒரு காணிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் உரிமை கோருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட, காணி தொடர்பான பிரச்சினைகளில் கைகலப்புக்கள் ஏற்படுவதாகவும் இதனாலேயே இது தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் அதிகம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

## சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டோரிடம் 13லட்சத்து 52 ஆயிரம் ரூபா தண்டம் அறவீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பொலிஸாரும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது பல சட்டவிரோத செயற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

இந்தநடவடிக்கையின் மூலம் கடந்த மாதம் மட்டும் 97 சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கசிப்பு மற்றும் சாராயம் தொடர்பாக 60 முறைப்பாடுகளும், கஞ்சா தொடர்பாக ஒரு முறைப்பாடும், சட்டவிரோதமாக பன்றி இறைச்சி கொண்டு சென்றமை தொடர்பாக ஒரு முறைப்பாடும், மணல் அகழ்வு தொடர்பாக 22 முறைப்பாடுகளும், மரம்வெட்டிச் சென்றமை தொடர்பாக 9 முறைப்பாடுகளும், பனம் கள்ளு வைத்திருந்தமை தொடர்பாக ஒரு முறைப்பாடும், ஆபாசப் படங்களை வைத்திருந்தமை தொடர்பாக 2 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறைப்பாடுகள் தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு 13 இலட்சத்து 52 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோத செயல்கள் மீள்குடியேறிய பிரதேசங்களிலேயே அதிகளவில் இடம்பெறுவதாகப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும் பொலிஸாரும், போதைபபொருள் தடுப்புப் பிரிவினரும் தொடர்ந்து தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)


## தொடர்பாடல் கருத்தமர்வு

(குருநகர்)

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்.சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் பாடசாலை மாணவர்களுக்கு சர்வதேச சமாதான தினம் மற்றும் வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமான முதலமர்வு இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 1 மணிவரை அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெறும்.

தரம் 10, 11, 12, 13 மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற கருத்தமர்வில் சாவக்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் என்பன கலந்துகொள்ளவுள்ளதாக கருத்தமர்வு அமைப்பாளர் செல்வி காஷ்மின் நிறஞ்சினி தெரிவித்தார். (68)

# புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்கள் 22 பேருக்கு வாழ்வாதார உதவிகள்



(பூநகரி)

முன்னாள் புலி உறுப்பினர்களாக இருந்து புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வுப் பயிற்சியளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இருபத்திரண்டு பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கான நிகழ்வு பூநகரி மன்னார் வீதியில் உள்ள 66 ஆம் படைப்பிரிவுத் தலைமைக்காரியாலயத்தில் 66 ஆம் படைப்பிரிவுக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயசூரியா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வாழ்வாதார உதவிகளாக கரித்தாஸ்-கியுடெக் நிறுவன அனுசரணையுடன் 6 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், 4 பேருக்கு தையல் இயந்திரங்களும், 6 பேருக்கு மீன்பிடி வலை உட்பட பல உபகரணங்களும், ஏனையவர்களுக்கு கோழி வளர்ப்பு, வியாபாரத்துக்கான உதவிகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் 661 ஆம் படைப் பிரிவுக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்னா கொடித்துவக்கு, லெப்.கேணல் தொறதெனியா, பூநகரி உதவி அரசாங்க அதிபர் கே.என்.வசந்தகுமார், கியூடெக் - கரித்தாஸ் இயக்குநர் ஜாவீஸ் அடிகளார், பூநகரிப் பங்குத்தந்தை பி.பிறாயன் அடிகளார், இந்து மதகுரு சிவஸ்ரீ அர்த்த நாரீஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொணடனர். (112)

# ஆனைபிடிச்சான் பகுதியில் மீள்குடியமர அனுமதி

(அரியாலை)

மண்டைதீவு கிராமத்தின் கிழக்குப் பகுதியில், துறைமுகத்துக்கு சற்றுத் தென் மேற்காக உள்ள ஆனைபிடிச்சான் பகுதியில் மக்கள் முன்பு குடியிருந்த குடியிருப்புக் காணிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த அனுமதியையடுத்து மண்டைதீவு திருவெண் காட்டுப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடல் மற்றும் வீரபத்திரர் ஆலயச் சூழலில் ஆட்கள் இல்லாத வீடுகளில் குடியிருந்தவர்கள் தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக் குடியேறியுள்ளனர்.

இவர்கள் வீடு அமைப்பதற்கு பொது நிறுவனங்களின் உதவியை எதிர்பார்த்துள்ளனர். (23)

## சிறுவர் சித்திரப்போட்டி

வடமராட்சி வலயப் பருத்தித்துறை, கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கான சிறுவர் சித்திரப்போட்டி எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

14ஆம் திகதி சனிக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை கோட்ட மாணவர்களுக்கு 15ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசலையிலும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கமலாம்பிகை பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (109)

## அதிபர்களுக்கான கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை தொடர்பாக இன்று நடைபெறவிருந்த கூட்டமொன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பழைய வலயக்கல்வி அலுவலகக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு 20 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகள் அனைத்தும் அதிபருடன் பொறுப்பாசிரியர் ஒருவரும் கலந்துகொள்ளுமாறும், அத்துடன் சித்திரை 2011 வரையான தர உள்ளீட்டு முன்னேற்ற அறிக்கையைக் கொண்டு வருமாறும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# போட்டிகளின் இலக்கு வெற்றி,தோல்வியல்ல ஆளுமை விருத்திக்கே அவை வழிவகுக்கும்

## உதவிக்கல்விப்பணிப்பாளர் மீரா அருள்நேசன்



(யாழ்ப்பாணம்)

மாணவர்கள், பாடசாலை மட்டங்களில் நடைபெறுகின்ற இத்தகைய போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றுவது அவர்களது வெற்றி,தோல்வி இலக்கல்ல சிறந்த ஆளுமையையும் சிறந்த மனப்பாங்கையும் வளர்த்துக் கொள்ளுவதற்கே.

இவ்வாறு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி ஆரம்பநிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றுகையில் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தொிவித்தார்.

அங்கு அவர் மேலும் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்ற வந்திருந்த மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில்:

மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த பொறுப்புடனும் சுற்று நிருபங்களுக்கு அமைவானதாகவும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். ஏற்கனவே யாழ்.வலயத்தின் மூன்று கோட்டங்களான யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகியவற்றில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவ மாணவிகள் வலயமட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வுகளில் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதமவிருந்தினராகவும் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் கோட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவ,மாணவிகள் முதலானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது பேச்சு, நாடகம், வில்லுப்பாட்டு. தனி நடனம், குழுநடனம், கட்டுரை, விவாதம், நாட்டார் பாடல்கள் போன்றவை மாணவர்களால் மேடையேற்றப்பட்டன. (பா)

# கணனிதொழில்நுட்பப்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(ஆனைக்கோட்டை)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் தொடர் பாடல் கனிணி தொழில்நுட்பம் ஆகிய பயிற்சியை கற்கவிரும்பும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கற்க விரும்புவோர் க.பொ.த சா/த பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் ஒரு தடவைக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 17 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். 6 மாத காலத்திற்கு நடைபெறும் இப்பயிற்சியில் சித்தியெய்திய மாணவர்களுக்கு (V.V.Q பட்டம் மூன்று) வழங்கப்படும். என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (104)

# 500 ரூபா அபராதத்துடன் எச்சரித்து விடுதலை

மோட்டார் சைக்கிளில் கைத் தொலைபேசியில் கதைத்துக் கொண்டு பயணம் செய்த நபர் ஒருவரை கிளிநொச்சி ஏ.9 வீதியில் வைத்து கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபருக்கு 500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்தார். (110)

# உள்ளூர் விவசாயத்தின் அபிவிருத்தி (4)



இயற்கையை அனுசரித்து அதனை வளப்படுத்தும் விவசாய செயன்முறைகளுள் எமது கவனத்தைத் திருப்பவேண்டிய நிலைக்கு நாமெல்லோரும் வந்துகொண்டிருக்கிறோம். இயற்கை அன்னை தந்த வளங்கள் எமக்கான சொத்து. அந்த வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டின் மூலமாகவே உள்ளூர் அபிவிருத்தியை அடையமுடியும். இங்குள்ள வளங்களை இனங்கண்டு அதன்மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை முன்னெடுப்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடிய விடயமாகும். இதில் மிக முக்கியமான வளமாக மனித வளத்தைக் கருத முடியும்.

கிராமப்புறத்திலிருந்து நகரத்தை நோக்கிய மக்களின் முன்நகர்வு இதற்குரிய பொதுவான காரணமாகும். இருப்பினும் இதுகாலும் நிகழ்ந்த இடர் காலங்களில் விவசாயச் செய்கையிலீடுபடும் இளையோரினை கணிசமான அளவுக்கு இழந்திருப்பதை தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றுடன் புதிதாக அறிமுகமாகும் தொழில்நுட்பங்களில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய தகவல் தொழில்நுட்பம் விவசாயத்தின் தூண்களாகவிருக்கும் எஞ்சியுள்ள இளையோரை ஈர்த்தெடுத்திருக்கும் நிலையில் விவசாயச் செய்கையை, பாரம்பரிய முறைகளை உள்வாங்கிய அதிகரித்த ஆதாயம் பெறக் கூடிய தொழிற்றுறையாக மாற்றியமைத்தாலன்றி இத் தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ள முடியாது.

இது இனிவருங்காலத்தில் விவசாய அபிவிருத்திக்கான மிகப்பெரும் சவாலாகவே இருக்கப்போகின்றது. விவசாய செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களை அவர்களின் நலன்களைப் பேணுகின்ற அதேவேளையில் விவசாயச் செய்கைகளிலேயே கவர்ந்திழுத்து வைக்க வேண்டிய தேவையும் எம்முன்னால் இருக்கின்றதென்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த வகையில் சுயமாக தமது முயற்சியால் விவசாயத் தொழிலிலீடுபடுபவர்களை ஊக்கமளித்து அவர்களது சுய முயற்சிக்கும் தன்னார்வத்திற்கும் பக்கபலமாக அனைவரும் இருத்தல் வேண்டும். எங்களூர் விவசாய அபிவிருத்தி இதன் மூலமே சாத்தியமாகும; தன்னிறைவு காணும்.

**சுயதொழில் முயற்சியில் தன்னார்வம் கொண்ட இளைஞனுக்கு ஊக்கமளிப்போமா?**

விவசாயச் செய்கையிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் இளையோர்களுக்கிடையில் சுயதொழிலை உருவாக்கி தனது முழுமுயற்சியையும் முதலிட்டிருக்கும் இளைஞனே டலஸ் அலஸ். சிற்பாசிரியர் ஆனந்தன் அவர்களின் பெறாமகன் இவர். வேலை தேடி வெளிநாடு செல்ல முடிவு செய்யப் பலரும் ஊக்கமளித்த போது உள்ளூரிலிருந்து தன்னாலும் முன்னேறி காட்ட முடியும் "என்று முயற்சி திருவினையாக்கும்" என்பதனை தனது தன்னம்பிக்கையாகக் கொண்டு "ஆனந்தி நாற்றுமேடை" எனும் விவசாயஞ்சார்ந்த தொழிலை மேற்கொண்டு வருகின்றார். மருதனார் மடத்தில் தெல்லிப்பளையை நோக்கிய கே.கே.எஸ. வீதியில் ஒரு மாதத்திற்கு முன்பு இவரது நாற்றுமேடை இருந்தது. பழவகைக் கன்றுகள், நிழல் மரங்கள், அழகுத்தாவரங்கள் என பலவகை நாற்றுக்களை சிறந்த முறையில் உற்பத்தி செய்து மக்களுக்குச் சிறிய இலாபத்துடன் வழங்கி வருகின்றார்.

பச்சைப் பசேலென இருக்கும் இவருடைய நாற்று மேடையில் கொய்யா, மா,பப்பாசி, மாதுளை, தேசி, தோடை என பலவகை பழமரக்கன்றுகளை நாற்று மேடையமைத்து உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் டயஸ் என்ற இளைஞனை தொண்டுசார் நிறுவனங்களும் அரச நிறுவனங்களும் அவரிடமிருந்து நல்ல நாற்றுக்களை வாங்கி விநியோகிப்பதன் மூலம் சுய முயற்சியுடைய இந்த இளைஞனை இன்னும் ஊக்குவிக்க முடியும். சிறந்த நாற்றுக்களைப் பெறுவதில் ஏற்படும் சிரமத்தினை



போக்கும் இவ்வாறான துடிப்புள்ள இளைஞர்களுக்கு அவர்தம் முயற்சி இன்னும் மேன்மையுற நீங்களும் உதவிடமுடியும். பலவகை மாமரக் கன்றுகளை இலகுவில் விரைந்து ஒட்டி வளர்க்கும் இவரது திறமையே தனி. சுயமுயற்சிக்கு உதாரணமாக இருக்கும் டயஸ் போன்ற உள்ளூர் இளைஞர்களை இன்னும் ஊக்கப்படுத்தும்போதே மேலும் பல இளைஞர்கள் இவ்வாறான சுயதொழில் முயற்சியில் ஈடுபட முன்வருவார்கள்.

விவசாய அபிவிருத்தியில் சிறந்த நாற்றுக்களையும் விதைகளையும் உற்பத்தி செய்தல் மிக முக்கியமான விடயமாகும். அதிலும் இவ்வாறான நாற்றுக்களை தரமானதாக சிறந்தர் வீரியங்கொண்டவையாக உருவாக்குதல் அவசிய மானதாகும். குடாநாட்டில் வந்து குவியும் வெற்று தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் என்பனவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்தி நாற்றுக்களை உற்பத்தி செய்கின்றார். மேலும் அழகுத் தாவரங்களில் பல வகையை தனது பண்ணையில் வைத்து உருவாக்கிக் கொடுக்கின்றார். தனது சொந்த முயற்சியின் மூலமே முன்னேறியிருக்கும் டயஸ் போன்ற இளைஞர்கள் மேலும் முன்னேற நாமும் உதவி செய்வோமா? அவரது பண்ணையிலுள்ள நாற்றுக்களை வாங்கினாலே அவரது தொழில் சிறப்படையும்.

இவை தவிர தனது கண்டுபிடிப்பின் மூலம் மண்ணெண்ணெய் இலாந்தரை பயன்படுத்தி கோழிமுட்டை பொரிக்க வைக்கும் இயந்திரத்தை உருவாக்கி உள்ளூரிலேயே கோழிக்குஞ்சுகளைப் பெறும் இவரது முயற்சியே தனி. இப்போது எமது தேவைக்கேற்ப முட்டை பொரிக்கும் இயந்திரத்தை அதிக செலவில் வாங்கித் தனது தொழிலை விரிவுபடுத்தும் இந்த இளைஞனின் தொழில் முயற்சி சிறக்க உள்ளூர் நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்ட இக்கட்டுரையினூடாக அழைக்கின்றோம்.

தற்போது மருதனார் மடத்திலிருந்த இவரது பண்ணையிருந்த காணி விற்பனையாகியதால் தெல்லிப்பளையில் உள்ளூருக்குள் ஒரு காணியில் தனது நாற்றுமேடையை அமைத்திருக்கிறார். இடம் உட்பகுதி என்பதால் இவரது நாற்றுக்களை விற்பனை செய்ய முடியாது தினந்தினந் தவித்துக்கொண்டிருக்கும் தன்னார்வ இளைஞனுக்கு கே.கே.எஸ். வீதி மற்றும் பலாலி வீதியிலுள்ள இவரது நாற்றுக்களை விற்பனை செய்ய பரோபகாரிகள் எவரேனும் இடங்கொடுப் பார்களெனில் உள்ளூர் தொழில் முயற்சியொன்றுக்கு உதவிக்கரம் நீட்டியதாகவே அமையும்.

**தொழிலின்றி அலையும் இளைஞர்களுக்கு முன்மாதிரி**

தொழில் வாய்ப்பின்றி அலையும் இளைஞர் கூட்டத்திற்கு முன்மாதிரியாக விவசாயஞ் சார்ந்த தொழிலை சிறப்பாகச் செய்ய முடியும் என தனது சுயமுயற்சியால் செய்து மெய்ப்பிக்கும் டயஸ் போன்ற இளைஞர்களுக்கு அவர் தொழில் சிறக்க விவசாய அபிவிருத்தியின் சில்லுகளை நகர்த்தி உதவி செய்வோமா? இவர் போன்ற பல இளைஞர்கள் பயிர் நாற்றுக்களை உற்பத்தி செய்ய முன்வர வேண்டும். தனது சுயதொழிலின் மூலமாகப் பல பெண்களுக்கு நாற்றுமேடை தயாரிப்பு, ஒடடுதல் என பல வேலைவாய்ப்புக்களை வழங்கியிருக்கும் இந்த அரிய முயற்சிக்கு நல்ல இதயங்கள் நிச்சயம் உதவிக்கரம் நீட்டும் என நம்பியிருக்கிறோம்.

நாமே வேலையை உருவாக்கி பிறருக்கும் வேலைவாய்ப்பினை வழங்கும் முயற்சிக்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும். உள்ளூரின் அபிவிருத்தி இதனாலேயே சாத்தியமாகும்.


பேராசிரியர்: கு.மிகுந்தன்
தலைவர்
விவசாய உயிரியல் துறை,
விவசாயபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சபை, யாழ்ப்பாணம்.



# அமைதிச் சூழலைப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முடியும்

## ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இயல்பு நிலையைப் பாதுகாத்துக் கொண்டு உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் கலுவன் சிறிராம் சனசமூக நிலையத்தின் தலைவர் மாரிமுத்து ரஜனிகாந் தலைமையில் நடைபெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தம் முடிவடைந்து அமைதிச் சூழலில் இருக்கின்ற இயல்பு நிலைமையைப் பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமது சுயலாப அரசியலுக்காக தமிழ் மக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல தமிழ் அரசியல்வாதிகள் முயல்கின்றனர். இவ்வாறானதொரு தவறான வழிகாட்டலின் மூலமே தமிழ் மக்கள் மிகப் பெரும் ஒரு மனிதப் பேரழிவை எதிர்கொண்டனர்.

இவ்வாறே புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் இங்கு நடந்த யுத்தத்தினைப் பயன்படுத்தி நிதி சேகரிப்பில் ஈடுபட்டார்கள். தற்போது அவர்கள் முன்னர் செய்த தவறை மீளவும் மேற்கொள்வதற்காக இங்கு ஒரு குழப்பமான சூழ்நிலை காணப்படுவதாகக் காட்டிக் கொண்டு தமது பிழைப்பை நடத்த முற்படுகின்றனர் எனவும் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சனசமூக நிலையத்துடன் நீண்டகாலமாக இணைந்து பணியாற்றியவர்களுக்கான பரிசில்களையும், நினைவுப் பரிசில்களையும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) ஈ.பி.டி.பி யின் வலிகாமம் பிரதேச அமைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி யின் வட்டுக்கோட்டைப் பிரதேச அமைப்பாளர் வள்ளுவன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற யாழ். மரியன்னை பேராலய முன்பள்ளித் திறப்பு விழாவில் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை முன்பள்ளியைத் திறந்து வைப்பதற்காக அழைத்து வரப்படுவதைக் காணலாம். (21)

# பழைய மாணவர்கள் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில், பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

# உதவிக் கொடுப்பனவை வழங்கும் வகையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு

(நெல்லியடி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொண்டராசிரியராகக் கடமையாற்றுபவர்களுக்கு உதவிக் கொடுப்பனவை வழங்கும் வகையிலும், அவர்களின் சேவையை உறுதிப்படுத்தும் நோக்கிலும் நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்றும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வில் தோற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஆளுநர் நிதியிலிருந்து வலயக் கல்விப் பணிமனை ஊடாகக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதே பிரதானமான நோக்காக அமைந்துள்ளது.

நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டவர்களின் கடிதத்தில் நடத்தப்படுகின்ற நேர்முகத் தேர்வின் மூலம் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக இணைக்க இடமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, இடைக்காலக கொடுப்பனவு, பணி உறுதிப்படுத்தல் எனத் தொடரும் இந்த செயற்பாடுகளினால் தாம் விரக்தி அடைந்துள்ளதாகவும், நீண்டகாலமாகப் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வருமானம் எதுவுமற்ற நிலையில் கல்வி கற்பித்த தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமையானது வேதனையளிப்பதாக இருப்பதாகவும் தொண்டராசிரியர்கள் தெரிவித்தனர். (17)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்கு மான பணியகத்தால் சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு பாடசாலைகளை ஒன்றிணைத்து சமாதான தின மற்றும் சமாதானக் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளை நடத்தவுள்ளதாக பணியக ஏற்பாட்டாளர் செல்வி சோபனா யோகலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இக்கருத்தரங்கின் முதலாமவர்வு இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 5, 6 7,8 மாணவர்களுக்கு நடத்தப் படவுள்ளது.

இக்கருத்தரங்கில் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அல்லாரை அரசியல் தமிழ் வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சாவகச்சேரி றோ.க. த.க பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்வர். (68)

# பாதுகாப்பற்ற பன்னங்கண்டிப் பாலம் பயணிகள் விபத்தில் சிக்கும் அபாயம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியிலுள்ள பன்னங்கண்டி ஆற்றுக்கான பாலம் பாதுகாப்பான முறையில் காணப்படாததால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகப் பொது மககள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சிக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள இப்பாலத்தின் பாதுகாப்புத் தூண்கள் அனைத்தும் உடைந்த நிலையில் காணப்படுவதாகவும், இதனால் இரவு வேளைகளில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் அத்துடன் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதைவிட அண்மையில் இப்பாலத்தினூடாக இரவு வேளையில் பயணித்த ஒருவர் ஆற்றிற்குள் தவறி விழுந்து காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இப்பாலத்தைப் புனரமைத்து மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்துமாறு அப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(உரும்பிராய்)

கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான் அந்தியகால சகாய நிதிச் சங்கத்தின் 55 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. உரும்பிராயிலுள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் சு.தர்மநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் செயலாளர், பொருளாளர் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறவுள்ளதாகவும் சங்கத் தலைவரும் செயலாளரும் அறிவித்துள்ளனர்.

# வத்திராயன் பகுதியில் விஷமச் செயல்கள் அதிகரிப்பு, சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் பகுதியில் பல விஷமத்தனமான செயல்கள் இடம்பெற்று வருவதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். வத்திராயன் மத்தி விளையாட்டுக் கழகத்தின் 2 கோல் கம்பங்கள் நேற்று முன்தினம் விஷமிகளால் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த பகுதி இராணுவத்தினர் சநதேகத்தின் பேரில் 3 பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அண்மையில் குறித்த பகுதியில் வாழ்கின்ற ஒருவருடைய வேலியின் தூண்கள் சில விஷமிகளால் இரவோடு இரவாக அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்த வீட்டு உரிமையாளருக்கு 16 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்படியான விஷமச் செயல்களில் ஈடுபடும் நபர்களை இனங்கண்டு பொலிஸாரும் இராணுவத்தினரும் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (38)

# புலமைப் பரிசில் வழங்கும் விழாவில் 155 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(நெல்லியடி)

கரவெட்டிப் பிரதேச சமுர்த்தி உதவிபெறும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.

இப் பிரதேசத்தைச் சேர்ந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 33 மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த 103 மாணவர்களுக்கும் பல்கலைக் கழக அனுமதி கிடைத்த 19 மாணவர்களுக்குமே கௌரவிப்பு இடம்பெற்றது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவும் கலந்து கொண்டனர். (12)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(09.05.2011 – திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
சித்திரை 26 ஆம் நாள்.
நட்சத்திரம் புநர்பூசம் மு.ப 7.39 வரை
திதி: ஷஷ்டி பி.ப 12.50 வரை
ஷஷ்டி விரதம்
ராகுகாலம் 7.24 –8.54
சுபநேரம் : 11.54 –01.24

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- மேடம்:– உடல் நலம், பண வரவு, வீட்டில் நிம்மதி.
- ரிஷபம்:– கவலை, மனச் சஞ்சலம், வீண் குழப்பம், கலகம்.
- மிதுனம் :– பண வரவு, மன நிம்மதி, நினைத்தது கைகூடும்.
- கடகம்:– தேக சுகக்குறைவு, கலகம், வீண் அலைச்சல், கவலை.
- சிம்மம்:– பண வரவு, வீண் செலவு, மனச் சஞ்சலம், கவலை.
- கன்னி :– மன அமைதி, கடவுள் வழிபாடு, விபத்து.
- துலாம் :– காரியத்தடை, பொருள் இழப்பு, மனச் சஞ்சலம்.
- விருச்சிகம்:– பண வரவு, மன நிம்மதி, காரிய சித்தி.
- தனுசு:– சோம்பல், வீண் செலவு, மனச் சஞ்சலம், கவலை.
- மகரம்:– பொருள் இழப்பு, காரியத்தடை, கவலை.
- கும்பம் :– பதவி உயர்வு, தேகாரோக்கியம், காரிய சித்தி.
- மீனம்:– பண வரவு, மன நிம்மதி, நண்பர் தொல்லை.

## கைதானவர்கள் இலங்கையர்கள்

(கொழும்பு)

கடந்த இரு வாரங்களுக்கு முன் அவுஸ்ரேலியா கொக்கொஸ் தீவுக்கு அருகாமையில் வைத்து அந்நாட்டு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் 81பேரும் இலங்கையர்கள் எனத் தெரிவித்துள்ளதாக அந்நாட்டிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவுஸ்ரேலியாவின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தமக்கு அறிவித்துள்ளதாக அங்குள்ள பதில் உயர்ஸ்தானிகர் சசிகலா பிறேமவர்த்தன தெரிவித்துள்ளார். இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்துமஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டிற்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# ஐ.நாவை பகைக்க வேண்டாம்; இலங்கைக்கு சீனா, ரஷ்யா அறிவுறுத்து

(கொழும்பு)

**ஐ.நாவைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் பான் கீ மூனை இழிவுபடுத்தக் கூடாது என்றும் இலங்கை அரசுக்கு ரஷயாவும் சீனாவும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று தெரிவித்துள்ளது.**

இலங்கையில் பணியாற்றும் எந்தவொரு அனைத்துலக அமைப்புக்கோ அல்லது அதன் பணியாளர்களுக்கோ இடையூறை ஏற்படுத்தக் கூடாது என்றும் இந்த நாடுகள் அறிவுரை கூறியுள்ளன.

ஐ.நா பொதுச்செயலரை இழிவுபடுத்தும் வகையிலான பேரணிகள், போராட்டங்களை தொடர்நது நடத்தினால், அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை மீளாய்வு செய்ய நேரிடும் என்று ரஷயாவும் சீனாவும் எச்சரித்துள்ளதாக ராஜத்தந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன்.

அத்துடன் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், அனைத்துலக அமைப்புகளையும் அதன் அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்வதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்து கொள்ளுமாறும் இந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

ஐ.நா அறிக்கை வெளியான பின்னர் கொழும்பிலுள்ள ஐ.நா பணியகத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதில் இந்த நாடுகள் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் ராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஐ.நா பொதுச்செயலரின் உருவப்பொம்மைகள் எரிக்கப்பட்டு நடத்தப்பட்ட போராட்டங்களின் பின்னர் தான் ரஷயாவும் சீனாவும் இந்த எச்சரிக்கையை இலங்கைக்கு விடுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்தே ஐ.நா பொதுச் செயலருக்கு எதிரான போராட்டங்களை இலங்கை அரசு நிறுத்தியுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டாரில் வேலைவாய்ப்பு



கட்டாரில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை அமைச்சர் டிலான் பெரேரா மேற்கொண்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக கட்டார் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த அமைச்சர் தலைமையிலான குழுவொன்று நேற்று கட்டார் பயணமாகியுள்ளது.

இந்த விஜயத்தின் போது இருதரப்பு உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதுடன், இலங்கையர்களுக்கு கட்டாரில் மேலதிக வேலைவாய்ப்பைப் பெறும் நோக்கில் இரு முக்கிய சந்திப்புக்களையும் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கட்டாரில் தொழிற்படும் வேலை வாய்ப்பு முகவர்களில் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். அதே வேளை கடந்த பெப்ரவரி மாதம் கட்டார் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் வேலைவாய்ப்பு உட்பட பல விடயங்கள் குறித்து கட்டாரின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் 1500 சீன ஊழியர்கள் பணிபுரிகின்றனர்

### அமைச்சர் சம்பிக்க தகவல்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இலங்கை ஊழியர்களுடன் சுமார் 1500 சீன ஊழியர்கள் பணியாற்றுவதாக இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இந்த அனல் மின் நிலையத்தின் முதல் கட்டத்திற்காக உள்நாட்டில் 3500 மில்லியன் ரூபா பெறப்பட்டதாகவும், சீனாவிலிருந்து 455 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும். போதே அமைச்சர் இத் தகவல்களைத் தெரிவித்தார்.



அத்துடன், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது கட்டத்திற்காக இலங்கையிலிருந்து 11,000 மில்லியன் ரூபாவும், சீனாவிலிருந்து 819 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிளாஸ்ரிக் கூடைப் பயன்பாடு எதிர்வரும் 15 இல் ஆரம்பம்

(கொழும்பு)

மரக்கறிகளைக் கொண்டு செல்லும் போது பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

போதியளவு பிளாஸ்ரிக் கூடைகள் உற்பத்தி செய்யப்படாமை காரணமாக இந்தத் திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஒரு இலட்சம் பிளாஸ்ரிக் கூடைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சட்டரீதியான முறையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

போதியளவு கூடைகள் உற்பத்தி செய்யப்பட்டதன் பின்னர் அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மரக்கறிகள் கொண்டு செல்லப்படும் போது உரிய பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக நாளாந்தம் பெருந்தொகையான மரக்கறிகள் விரயமாகின்றன.

இந்த நிலைமையை கவனத்தில் கொண்டே பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தத் தீர்மானித்ததாக அவர் மேலும் கூறினார்.

# யானைகளின் தாக்குதலால் வருடாந்தம் 50பேர் உயிரிழப்பு



(கொழும்பு)

யானைகளின் தாக்குதல் காரணமாக வருடாந்தம் 50 பேர் வரை பலியாவதாகவும், 200 யானைகள் உயிரிழப்பதாகவும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

யானைகள் பயணிக்கும் பாதைகளை தடை செய்யும் வகையில் அமைக்கப்படும் அனைத்து சட்ட விரோத கட்டடங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதைகளை தடுப்பதன் காரணமாகவே யானைக்கும் மனிதனுக்கும் இடையே மோதல்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் என தெரிவித்த அவர், இதனை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தவிர யானைகளைப் பாதுகாக்கும் நோக்கில் மேலும் மூன்று சரணாலயங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருட முடிவிற்குள் ஹொரவப்பொத்தான வெஹரகல மற்றும் மாதுருஓயா ஆகிய இடங்களில் இந்த சரணாலயங்கள் அமைக்கப்படவுள்ளன.

சரணாலயங்களுக்கு அண்மித்த பகுதிகளில் யானைகளுக்கான உணவு வகைகளை பயிரிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, காட்டு யானைகளின் சரியான எண்ணிக்கையினை கணக்கிடும் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலை ஆசிரியர்களுக்கு ஆதரவு அளிக்கும் ஜே.வி.பி

(கொழும்பு)

சம்பள உயர்வு கோரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிவித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு மக்கள் விடுதலைமுன்னணி (ஜே.வி.பி) ஆதரவு தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அது வெறும் வாக்குறுதியாகவே உள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானது என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

தெற்காசியாவில் இலங்கையிலேயே பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுவதாகவும் ரில்வின் சில்வா கூறினார். கனிஷ்ட விரிவுரையாளர்களுக்கு 20,750 ரூபாவும் சிரேஷ்ட பேராசிரியர்களுக்கு 57,750 ரூபாவும் சம்பளமாக வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.



2600 ஆவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு மின்சக்தி,எரிசக்தி அமைச்சரும் ஜாதிக ஹெலஉறுமயவின் செயலாளருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கந்தபொட தியான நிலையத்தில் 11 நாட்கள் தியானம் செய்யப்புறப்பட்டுள்ளார். அவருடன் மேல்மாகாண சபை அமைச்சரான உதய கமன்பில்ல உட்பட ஜாதிக ஹெல உறுமய அங்கத்தவர்கள் 25பேரும் இவ்வாறு தியானம் செய்யப் புறப்பட்டுள்ளனர்.

## மத்திய கல்லூரி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் பல பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை யாழ் இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. இப்போட்டி பலர் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்ட பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கிரிக்கெட், கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்ட முடிவுகள் வெளியாகியுள்ளன.

கிரிக்கெட்: ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெரியகோமரசகுளம் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வவுனியா தமிழ் வித்தியாலயமும், மூன்றாமிடத்தை புதுக்குளம் ம.வியும் பெற்றுள்ளன. பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை புதுக்குளம் ம.வியும், இரண்டாமிடத்தை பூம்புகார் கண்ணி வித்தியாலயமும், மூன்றாமிடத்தை இறம்பைக்குளம் மகளிர் ம.வியும் பெற்றுக் கொண்டன.

கால்பந்து: 19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா தமிழ் மத்திய ம.வியும், இரண்டாமிடத்தை முஸ்லிம் ம.வியும், மூன்றாமிடத்தை புதுக்குளம் ம.வியும் பெற்றுக் கொண்டன. 17 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா தமிழ் மத்திய ம.வியும், இரண்டாமிடத்தை புதுக்குளம் ம.வியும், மூன்றாமிடத்தை முஸ்லிம் ம.வியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பூம்புகார் கண்ணகி வித்தியாலயமும், இரண்டாமிடத்தை இறம்பைக்குளம் மகளிர் ம.வியும், மூன்றாமிடத்தை கனகராயன்குளம் ம.வியும் பெற்றுக் கொண்டன.

வலைப்பந்தாட்டம்: 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை கனகராயன்குளம் ம.வியும், மூன்றாமிடத்தை இறம்பைக்குளம் ம.வியும், 17 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை இறம்பைக்குளம் மகளிர் ம.வியும், இரண்டாமிடத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை தவசியாகுளம் அ.த.க. பாடசாலையும், 19 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை சைவப் பிரகாச மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை நெழுக்குளம் ம.வியும், மூன்றாமிடத்தை தவசியாகுளம் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (12)

## கபடிப் போட்டி 13இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கபடிப் போட்டி வரும் 13ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான இக் கபடிப் போட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்கள் பிரிவில் வேலாயுதம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சென் அன்ரனிஸ், சென் ஹென்றிஸ், இணுவில் மத்தி, ஹாட்லிக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சாவகச்சேரி றிபேக், கலட்டி ஆர்.சி. ஆகிய பாடசாலைகளும்,

பெண்கள் பிரிவில் பெண் ஜசிந்தா ஆர்.சி, மெதடிஸ் பெண். உயர்தரப் பாடசாலை, சாவகச்சேரி இந்து, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர், சாவகச்சேரி றிபேக், இளவாலை மெய்கண்டான், நெடுந்தீவு ஆர்.சி, கச்சாய் ஜி.ரி.எம்.எஸ், நாவந்துறை ஆர்.சி., நாவாந்துறை சென் தோமஸ், டி.ஆர்.தியாகராஜா ம.வி, இளவாலை கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளும் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பங்குபற்றும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டிகள் தாமதமின்றி நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.




## மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி மத்திய கல்லூரி, திருக்குடும்பம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் திருக்குடும்பம் கன்னியர் மடத் தேசியப் பாடசாலையும், ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பெற்றது.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். திருக்குடும்பம் கன்னியர் மடத் தேசிய பாடசாலையும், வேம்படி மகளிர் கல்லூரியும் மோதின. இதில் திருக்குடும்பம் கன்னியர் மடத் தேசியப் பாடசாலை வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.

இதில் மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஆடிய உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்று, மூன்றாமிடத்தைப் பெற்றது. (பா)

## முல்லைத்தீவு மாவட்ட பெரு விளையாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பெருவிளையாட்டுப் போட்டி நாளை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இதன் போட்டி அட்டவணை நேற்று வெளியாகியது. இதில் நாளை செவ்வாய்க்கிழமை 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியும், நாளை மறுதினம் 17, 19 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியும், அதேதினம் 17, 18, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் முல்லை. வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது. (42)

## வோர்னுக்கு பிரிவுபசார விழா



ஓய்வுபெறவுள்ள வோர்னுக்கு பிரிவுபசார விழா நடத்த ராஜஸ்தான் அணி உரிமையாளர் நடிகை சூஷில்பா ஷெட்டி திட்டமிட்டுள்ளதாக அந்த அணியின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித் தலைவர் வோர்ன் இந்த ஐ.பி.எல். போட்டியோடு ஓய்வு பெறுகிறார். இனி அவர் அந்த அணியின் பயிற்சியாளராகவோ அல்லது ஆலோசகராகவோ நியமிக்கப்படலாம். ஓய்வு பெறும் வோர்னுக்குப் பிரிவு உபசார விழா நடத்த ராஜஸ்தான் அணி உரிமையாளர் நடிகை ஷில்பா கெஷட்டி திட்டமிட்டு உள்ளார். ஐ.பி.எல். போட்டி முடிந்த பின்னர் இந்தப் பிரிவுபாசாரம் நடைபெறும். எந்த இடம், எந்தத் திகதி என்பது இன்னும் முடிவாகவில்லை. வோர்ன் தலைமையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் முதலாவது ஐ.பி.எல். கிண்ணத்தைக் கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

## சவால் நிறைந்த போட்டி



ஸ்பெயினில் நடைபெற்று வரும் மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை ரபேல் நடால் மற்றும் சேர்பியாவின் நோவோக் ஜோகோவிச் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரரும், முதல் நிலை வீரர் ரபேல் நடாலும் மோதினர். இதில் 5-7, 6-1, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்ற நடால் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இவ்வெற்றியின் மூலம் களிமண் தரையில் தொடர்ந்து 37ஆவது வெற்றியைப் பதிவாக்கியுள்ள நடால் கடந்த இரண்டு வருடங்களாக இத்தொடரில் வீழ்த்த முடியாத வீரராக வலம் வருகின்றார்.

இதேவேளை, மற்றொரு அரையிறுதியில் சேர்பியாவின் நோவோக் ஜோகோவிச்சும், தோமஸ் பெலுஸ்கியும் மோதினர். இதில் ஜோகோவிச் 4-6, 5-4, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். இதேவேளை, இந்த வருடம் ஜோகோவிச் பற்கு பற்றிய 31 போட்டிகளிலும் பெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி இரு வீரர்களுக்கும் கடும் சவால் மிக்கதாக அமையும் அதேவேளை, ரசிகர்களுக்கு பெரும் விருந்தாகவும் அமையும் என விளையாட்டு விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## விதிமுறையில் மாற்றம்



(பீஜிங்)

குட்டைப் பாவாடை அணிந்து விளையாடவேண்டும் என்ற விதிமுறைக்கு பல நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், விதிமுறையில் மாற்றம் செய்யப்பட வாய்ப்பு இருக்கிறது என்று உலக பட்மிண்டன் சபை நிர்வாகி தெரிவித்துள்ளார்.

பட்மிண்டன் வீராங்கனைகள் போட்டியின் போது குட்டைப் பாவாடை அணிந்து விளையாட வேண்டும் என்றும், இந்த விதிமுறை ஜூன் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என்றும் உலக பட்மிண்டன் சபை அறிவித்திருந்தது.

வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்து விளையாடுவதற்கு இந்தியா, சீனா, இந்தோனேஷியா, சுவீடன், டென்மார்க் உள்ளிட்ட நாடுகளின் பட்மிண்டன் சம்மேளனங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் உலக பட்மிண்டன் சபை ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் சீனாவில் வரும் 28-ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் புதிய விதிமுறை குறித்து விவாதிக்கப்படுகிறது. அப்போது வீராங்கனைகளுக்கான குட்டைப் பாவாடை விதிமுறையில் மாற்றம் செய்யப்பட வாய்ப்பு இருக்கிறது என்று உலக பட்மிண்டன் சபை நிர்வாகி தெரிவித்துள்ளார்.

## முல்லை சென்யூட் சம்பியன்

கரைதுரைப்பந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கால்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு சென்யூட் அணி சம்பியனானது. கரைதுரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வற்றாப்பளை மங்களேஸ்வரா அணியும் முல்லைத்தீவு சென்யூட் அணியும் மோதியது. இதில் மங்களேஸ்வரா அணியை 2-0 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்று சென்யூட் அணி வெற்றிபெற்றது. (40)

## தரவரிசையால் அதிர்ச்சி



இன்று வெளிவரவுள்ள ரென்னிஸ் தரப்படுத்தல் அமெரிக்காவுக்கு பெரும் அதிர்சசியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, கடந்த 38 ஆண்டு கால தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் அமெரிக்க வீர, வீரர்கனைகள் எவரும் இடம்பெறாத வகையில் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக ரென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்படவிருக்கிறது.

இந்தப் பட்டியலில் முதல் பத்து இடங்களுக்குள் எந்தவொரு அமெரிக்க வீரருக்கும், வீராங்கனைக்கும் இடம் கிடைக்கவில்லை. 38 ஆண்டு கால உலக தரவரிசைப்பட்டியலில் முதல் பத்து இடங்களுக்குள் அமெரிக்கர்கள் யாரும் இல்லாதது இதுவே முதல் முறையாகும்.

ஆண்கள் தர வரிசை 1973ஆம் ஆண்டும், பெண்கள் தரவரிசை 1975ஆம் ஆண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. 10ஆவது இடத்தில் இருந்த செரீனா வில்லியம்ஸ் காயம் காரணமாக அதிக நாட்கள் விளையாடாமல் இருப்பதால் அமெரிக்காவுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் அதிகபட்சமாக 19ஆவது இடத்தையும், அமெரிக்க வீரர்களில் ஆன்டி ரோட்டிக் அதிகபட்சமாக 12ஆவது இடத்தையும் பிடிப்பார்கள் என்று தெரிகிறது.

# கடல் நீர்மட்ட அதிகரிப்பு காரணமாக முக்கிய நகரங்கள் மூழ்கும் அபாயம்

## நிபுணர்கள் எச்சரிக்கை


ஆர்டிக் மற்றும் கிரீன்லாந்து பகுதிகளில் ஏற்பட்டுள்ள தட்ப வெப்ப நிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் அதிகமாக உருகி ஏராளமான அளவில் நீர் வெளியேறி வருகிறது.

இதே நிலை நீடித்தால் வரும் 2100 ஆம் ஆண்டுக்குள் பங்களாதேசம் முதல் புளோரிடா வரையிலும், பசிபிக் பெருங்கடலின் தாழ்வான பகுதிகளிலும், லண்டன் முதல் ஷங்காய் வரையிலான நகரங்களிலும் கடல் மட்டம் 1.6 மீட்டர் அளவிற்கு அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் சுனாமி தாக்கும் ஆபத்தும் அதிகரிக்கும் என்று கடல் நீர் மட்டம் குறித்த சர்வ தேச ஆய்வு தெரிவிக்கிறது. கடந்த ஆறு ஆண்டு களாக பூமி உருண்டையின் வெப்ப நிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக ஆர்டிக் பகுதியில் வெப்ப நிலை உயர்ந்துள்ளது என எட்டு நாடுகளின் திட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனால் பனிக்கட்டிகள் தொடர்ந்து உருகி ஏராளமான அளவில் நீர் வெளியேறுகிறது. இவ்வாறு வெளியேறும் நீர் கடலில் கலப்பதால் கடல் மட்டம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 0.9 மீற்றர் முதல் 1.6 மீற்றர் வரை அதாவது 5 அடி, 3 அங்குலம் வரை கடல் மட்டம் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலக தட்ப வெப்ப நிலை குறித்து ஆய்வு செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு கடந்த 2007 ஆம் ஆண்டில் நடத்திய ஆய்வில் வரும் 2100 ஆம் ஆண்டில் கடல் மட்டம் 18 முதல் 59 செ.மீ அளவுக்கு அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.






கடல் மட்டம் உயர்வது குறித்து ஐரோப்பிய தட்ப வெப்ப நிலை குறித்த அமைப்பின் ஆணையர் ஹெட்கார்ட் கூறுகையில் -


உலகில் பலவேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத்துமே அடுத்த சில ஆண்டுகளில் கடல் மட்டம் அதிகரித்தும் என்று தான் கூறுகின்றன. இது கவலையளிக்கும் ஒரு தகவலாகும் என்றார்.

இந்நிலையில் தட்ப வெப்ப சீர்குலைவை தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடல் மட்டம் அதிகரிக்கும் போது மாலத்தீவு உள்ளிட்ட உலகின் சில நாடுகள் மூழ்கிவிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் வரும் 2100 ஆம் ஆண்டில் 1.6 மீற்றர் அளவிற்கு கடல் மட்டம் அதிகரிக்கப் போகிறது என்ற தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் கடல் மட்டம் அதிகரிப்பால் சுனாமி தாக்குதலும் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். இதற்கு சமீபத்திய ஜப்பான் சுனாமியை உதாரணமாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சுற்றுச்சூழலை பாதுகாத்து வெப்ப நிலை அதிகரிக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சர்வதேச அளவிலான இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்கும்

# தொலைக்காட்சி பார்த்தபடி ஒசாமா வீடியோவை வெளியிட்ட அமெரிக்கா



(வொஷிங்டன்) பாகிஸ்தானில் அபோத் தாபாத் நகரில் தங்கியிருந்த ஒசாமா பின்லேடன் தொலைக் காட்சி பார்த்தபடி இருந்துள்ளதாகக் காட்டும் வகையிலான வீடியோவை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. இதன் மூலம் பாகிஸதான் எல்லைக்குட பட்ட நகரில் தான் இருந்தார் என்பதற்கு மேலும் கூடுதல் ஆதாராம் கிடைத்துள்ளது.

கடந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை இஸ்லாமாபாத் அருகே பதுங்கி இருந்தபோது அமெரிக்கப் படையினரால் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து இவரது வீட்டில் இருந்து முக்கிய பொருட்கள் கைப் பற்றப்பட்டன. இதில் ஒரு சில காட்சிகள் கொண்ட வீடியோ கசட்டை அமெரிக்கா வெளியிட்டது. இந்த வீடியோக்களில் ஒன்றில் ஒசாமா பின்லேடன் தொலைக்காட்சி பார்ப்பது போன்ற காட்சி இடம் பெற்றிருக்கிறது.

இந்நேரத்தில் தொலைக் காட்சியில் இவர் உரையாற்றும் படியான வீடியோவை இவரே ரிமோட் மூலம் இயக்கி பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த வீட்டில் பெரும் அளவில் ஆடம்பர பொருட்கள் எதுவும் இல்லை சாதாரன மேஜை மீது ஒரு பழைய டி.வி., மற்றும் இதனை சுற்றி மின் வயர்கள் சிதறிக்கிடப்பது போன்றுள்ளது.

இந்த வீட்டில் இருந்தபடி பயஙகரவாதிகளுக்கு உத்தரவிடுவது, அவர்களை செயல்படுத்துவது உள்ளிட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளது என அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இங்கு இருந்து எடுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்டையில் பல்வேறு தாக்குதல் திட்டங்களை பாகிஸதானில் இருந்தபடி பின்லேடன் நிறைவேற்றியிருக்கிறான் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை என்றனர்.

வெளியிடப்பட்ட வீடியோவில் ஆடியோவை அமெரிக்கா தடை செய்து விட்டது. இதன் மூலம் மேலும் ஒசாமாவின் கொள்கைகளை பரவ விடாமல் தடுக்கும் நோக்கமாக அமையும் என்றும் ஓர் அமெரிக்க உளவுத் துறை அதிகாரி தெரிவித்தார்.

# வலிகாமம் கல்வி வலய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தின, எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலய மட்டத் தமிழ்த்தின, எழுத்தாக் கப் போட்டிகள், கடந்த 5 ஆம், 6ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றிருந் தன.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்களை வலிகாமம் கல்வி வலயம் வெளியிட்டுள்ளது.

இப்போட்டிகளில், ஒவ் வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங் கள் முறையே வருமாறு:

பிரிவு -1

*எழுத்தாக்கப் போட்டி*

கஜலக்சி கிருபானந்தன் (மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்), சானுஜா பாக்கியநாதன்(ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை), ஜனனி மதன்மோகன்((பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தியாலயம்)

பிரிவு - 2

*கட்டுரைப்போட்டி*

ப.திவ்வியா(அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ரூபிசா குலேந்திரன் (மானிபபாய் மகளிர் கல்லூரி), துஷாந்தினி ஞானச்சந்திரன் (இளவாலை கன்னியர் மடம் ம.வித்தியாலயம்).

பிரிவு -3

*கட்டுரைப்போட்டி*

தே.உமையாழினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), காருண்யா குணரத்தினம் (உடுவில் மகளிர் கல்லூரி), குணரட்ணம் பிரதாப் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

பிரிவு -4

*கட்டுரையும் இலக்கியம் நயத்தலும்*

விமலாம்பிகைபாகன் திவாகரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ம.கோகுலசாயி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), து.மேதுஷா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி).

பிரிவு - 5

கட்டுரையும் இலக்கியம் நயத்தலும்.

தர்சிகா பஞ்சாபிகேசன் (இணுவில் மத்திய கல்லூரி), வர்ணுஜா மிலேந்திரன் (இளவாலை கன்னியர் மடம் ம.வித்தியாலயம்) துரைசிங்கம் வசிகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

பிரவு -4

*இலக்கணப் போட்டி*

கரிகரன் அகில்வேல் (சென். கென்றியரசர் கல்லூரி), ஜோனபிரான்சிஸ் டாண்ஸ்ரன் (சில்லாலை றோ.க.த.க.பாடசாலை), கி.கோபிதா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

பிரிவு -5

சுலக்கனா சூரியகுமார் (சங்கானை சிவப்பிரகாச ம.வித்தியாயலம்), வா.மோகனரூபி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), தர்சினி நித்தியானந்தம் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

பிரிவு - 5

*திறனாய்வுப் போட்டி*

கோபிகா சுவாமிநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வரதராஜா துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி), சு.திசாங்கன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

பிரிவு -4

குறுநாடக ஆக்கப் போட்டி

ஜெ.கௌதமி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சன்சிகா சதீஸ்கந்தராசா (ஏழாலை மகா வித்தியாலயம்), க.கௌசலை (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்).

பிரிவு - 5

*சிறுகதையாக்கம்*

ரபிதா கண்ணதாசன் (இணுவில் இந்துக் கல்லூரி), நிந்துஜா வேல்முருகன் (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), குணரட்னம் பிரதீப் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

பிரவு - 5

குறுநாடக ஆக்கப்போட்டி

யசோதா இராசையா (பண் ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), தர்சன் ஜெயரத்தினம் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), திவ்வியா மகேந்திரன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்).

பிரிவு - 4

*கவிதை ஆக்கம்*

டெனா இராகுலதேவன் (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), கோ.சங்கீதா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), சுபாஜினி துதிகரன் (மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க் பாடசாலை).

பிரிவு -5

கௌதமி யோகநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்ஜா டலிக்குமார் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ச.சர்வகா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி).

பிரிவு -4

*சிறுகதையாக்கம்*

த.திலக்சன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), விதுஷா கிருபாகரன் (சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), சிதம்பர பாலினி கதிர்காமநாதன் (விக்ரோறியாக் கல்லூரி).

மேற்படி எழுத்தாக்கப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட போட்டியாளர்களுக் கான மாவட்ட மட்ட எழுத் தாக்கப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர்களும், பொறுப்பாசிரியர்களும் முதலாம் இடம் பெற்று வெற்றியீட்டிய மாணவர்களை இப்போட்டியில் பங்குபற்ற வழிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## தரவட்டச் செயலமர்வு


வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குரிய தரவட்டச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு யாழ். இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 2 ஆம் தவணைக்குரிய வினாத்தாள் தயாரித்தல், பரீட்சை நடத்துதல் தொடர்பான விடயங்கள் நடைபெறவுள்ளன. எனவே தரம் 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது செயலமர்விற்கு வருகை தரச் செய்யுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# மகளைக் காப்பாற்றுவதற்காக ராஜா பலிக்கடா ஆக்கப்படுகிறார்

## கிருஷ்ணசாமி குற்றச்சாட்டு



(சென்னை)

**முதல்வர் கருணாநிதி, மகள் கனிமொழியைக் காப்பாற்ற, முன்னாள் அமைச்சர் ராஜாவைப் பலிகடாவாக ஆக்குகிறார், என, புதிய தமிழகம் கிருஷ்ணசாமி குற்றம்சாட்டியுள்ளார்.**

அவர் நிருபர்களிடம் கூறியதாவது: ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில், முதல்வர் கருணாநிதி குடும்பத்தினர் அதிக பலனடைந்துள்ளனர். ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான ராஜா வைப் பதவியில் இருந்து அகற்றி, நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை அமைக்க வேண்டும் என, லோக்சபாவை எதிர்க்கட்சியினர் முடக்கினர். அப்போது கூட, ராஜாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து, முதல்வர் எவ்வித கருத்தும் கூறவில்லை. மாறாக, தலித் என்பதால் ராஜா மீது குற்றம் சுமத்துகின்றனர் என்றும், ஆரிய, திராவிட போர் என்றும், ஊழலுக்கு சாதி வர்ணம் பூசினார் கருணாநிதி.

ராஜா குற்றமற்றவர் என கூறிய தி.மு.க., இப்போது, ராஜா தான் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேட்டிற்குக் காரணம். கனிமொழிக்கு எவ்வித தொடர்பும் இல்லை என, நீதிமன்றில் கூறியிருப்பது கண்டனத்திற்குரியது. ஊழலில் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். கனிமொழியைக்காப்பாற்ற, ராஜாவைப் பலிக்கடாவாக ஆக்கும் முயற்சியில் தீவிரமாக முதல்வர் ஈடுபட்டுள்ளார் என்பதற்கு, நீதிமன்றில் வழக்கறிஞர் வைத்த வாதமே சாட்சி. இவ்வாறு கிருஷ்ணசாமி கூறினார்.

# ஸ்பெக்ட்ரம் பணம் மொரீசியஸில் விசாரணை நடத்த சி.பி.ஐ. பயணம்

(புதுடில்லி)

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேட்டில் பெற்ற பணம், மொரீசியசில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்துவதற்காக, மத்திய அமலாக்க பிரிவு மற்றும் சி.பி.ஐ., அதிகாரிகள், அடுத்த வாரம் மொரீசியஸ் செல்ல உள்ளனர்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்த வழக்கு விசாரணை, உயர் நீதிமன்றம் மற்றும் டில்லி, பாட்டியாலா சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றங்களில் நடந்து வருகின்றன.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு மூலம் பெற்ற பணம், மொரீசிஸியஸ் உள்ளிட்ட நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து, மத்திய அமலாக்க பிரிவு அதிகாரிகளும், சி.பி.ஐ., அதிகாரிகளும், இது குறித்து விசாரிப்பதற்காக, வரும் 15 அல்லது 16ஆம் திகதியில் மொரீசியஸ் செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மொரீசியசில் உள்ள சில முக்கிய நிறுவனங்களிடமும், இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளனர்




# கருணாநிதி மீண்டும் முதல்வராவதற்கு தமிழக மக்கள் வாக்களித்துள்ளனர்

## என்கிறார் தங்கபாலு



(சென்னை)

தமிழகத்தில் மீண்டும் கருணாநிதி முதல்வராக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று கே.வி. தங்கபாலு கூறினார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு முதல்வர் கருணாநிதியைச் சென்னை கோபாலவுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தத்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் அரை மணி நேரம் வரை நீடித்தது. பின்னர் தங்கபாலு அளித்த பேட்டியில், நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்வர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி தமிழகமெங்கும் மிக சிறப்பாகப் பணியாற்றியது. ஆகவே, தமிழகத்தில் வரும் தேர்தல் முடிவுகள் கருணாநிதி தலைமையிலான அரசு ஆற்றி வரும் பணிகளுக்கு அல்லது மத்தியில் சோனியா காந்தி வழிகாட்டுதலின் பேரில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு ஆற்றிவரும் அரும்பணிகளுக்கு தமிழக மக்கள் சிறந்த வெற்றியைக் கொடுப்பார்கள்.

அரசின் சாதனைகளுக்காக தமிழக மக்கள் வாக்களித்திருப்பது மிகச் சிறந்த பாக்கியம். கருணாநிதி ஆறாவது முறையாக முதல்வராக பதவியேற்பார். எங்களுடைய முக்கியமான குறிக்கோள் தமிழகத்தில் மீண்டும் கருணாநிதி தலைமையிலான அரசு அமைய வேண்டும் என்பதுதான். கூட்டணி அரசு அமைந்தால் அதில் காங்கிரஸ் கட்சி பங்கேற்குமா என்பது பற்றி நாங்கள் இப்போது எதுவும் சொல்ல முடியாது. இவ்வாறு தங்கபாலு கூறினார்.

# கனிமொழிக்கு விலக்கு அளிக்க சி.பி.ஐ. நீதிமன்றம் மறுப்பு



(சென்னை)

2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கலைஞர் ரி.வி.யின் பங்குதாரர்களான கனிமொழி, சரத்குமார் (நிர்வாக இயக்குனர்) ஆகியோர் சி.பி.ஐ. நீதிமன்றில் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை தினமும் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி ஓ.பி.ஷைனி உத்தரவிட்டார்.

சி.பி.ஐ. நீதிமன்றில் தினமும் ஆஜராக வேண்டும் என்பதில் இருந்து தங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கனிமொழியும், சரத்குமாரும் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை ஆய்வு செய்த நீதிபதி ஷைனி, இவர்கள் இருவரும் தினமும் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க முடியாது என்று மறுத்துவிட்டார். எனவே கனிமொழியும், சரத்குமாரும் 14ஆம் திகதிவரை சி.பி.ஐ. நீதிமன்றில் தினமும் ஆஜராவார்கள் என்பது உறுதியாகியுள்ளது.



ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த அருணாச்சல முதல்வர் டோர்ஜி காண்டுவின் உடலுக்கு பிரதமர் மன்மோகன்சிங் அஞ்சலி செலுத்தியபோது..

# தங்கக் கட்டி கடத்திய ஏழு இலங்கையர் கைது

(மும்பை)

மும்பையில் உள்ள ஒரு ஹோட்டலில் இலங்கையைச் சேர்ந்த சிலர் தங்கத்தை கடத்திக் கொண்டு வந்திருப்பதாக சுங்கத்துறை புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. உடனே பொலிஸாருடன் அவர்கள் அங்கு சென்று திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது 7 இலங்கையர்களும், மும்பையை சேர்ந்த ஒருவரும் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து 2 கிலோ தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இலங்கையர்களும் கடந்த வெள்ளிக்கிழமை தங்கக் கட்டிகளை கடத்திக் கொண்டு மும்பை வந்ததும், அங்கு மும்பையைச் சேர்ந்த விஜய் மாலி என்பவருடன் சேர்ந்து அவர்கள் அவற்றை சர்வதேச தங்க சந்தையில் விற்க முயற்சி செய்ததும் அதிகாரிகளின் விசாரணையில் தெரிய வந்தது.

பிடிபட்ட எட்டுப் பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மீண்டும் பாபர் மசூதி வழக்கு

(புதுடில்லி)

பாபர் மசூதி வழக்கில் அகலாபாத் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து பல்வேறு முஸ்லிம் மற்றும் இந்து அமைப்புகள் செய்த மனுக்களின் மீது உச்சநீதிமன்றத்தில் நாளை விசாரணை நடைபெறவுள்ளது.

முன்னதாக அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தை 3 பகுதிகளாகப் பிரித்து முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் நிர்மோஹி அகாரார்களுக்கு வழங்கவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ராமர் பிறந்த இடம் குறித்து தவறாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட மனு மீதான விசாரணையே இன்று நடைபெறவுள்ளது.

# மிகப்பெரிய ரெலஸ் கோப் திட்டம் இந்தியாவும் இணைந்து கொள்கிறது

(புதுடில்லி)

உலகின் பல்வேறு நாடுகள் இணைந்து அமைக்கப்படவுள்ள மிகப்பெரிய ரெலஸ் கோப் திட்டத்தில் இந்தியா சேர உள்ளது. எஸ்.கே.ஏ.என்றழைக்கப்படும் ஸ்கொயர் கிலோமீட்டர் அர்ரே திட்டத்தில் அவுஸ்ரேலியா, சீனா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி நெதர்லாந்து, நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள 67 அமைப்புகள் இந்த திட்டத்தை செயல்படுத்தப்பட உள்ளன. 3 ஆயிரம் கிலோ மீட்டர் சுற்றளவில் அமைய உள்ள இந்த திட்டத்தில் 15 மீட்டர் அகலம் கொண்ட 3 ஆயிரம் டிஷ் ஆன்டனாக்கள் பயன்படுத்தப்பட உள்ளது. இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்திற்கு இந்தியாவின் சார்பில் சுமார் 40லட்சம்ரூபாய் வழங்கப்படஉள்ளது. இத்தொகை இந்தியாவின் பல்வேறு அறிவியல் அமைப்புகள் மூலம் வழங்கப்படலாம் என்று தெரிகிறது. இத்திட்டம் நியூசிலாந்து அல்லது அவுஸ்ரேலியா அல்லது தென்னாபிரிக்காவில் அமைக்கப்படலாம் என்று தெரிகிறது. இத்திட்டத்தில்இணைவதன் மூலம் அன்ரனாதொழில்நுட்பவளர்ச்சி, பைபர் நெட்வேர்க், சிக்னல் பிரௌசிங், கணினி தொழில்நுட்பத்தில் மேம்பாடு அடையமுடியும். கனடா நாட்டில் வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ள எஸ். கே. ஏ. கூட்டத்தில் புனேயில் உள்ள நஷனல் சென்டர் பார் ரேடியோ அஸ்ட்ரோனமி (என். சி. ஆர். ஏ.) அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பங்கேற்க உள்ளதாக என். சி. ஆர். ஏ. இயக்குனர் எஸ். கே. கோஸ் தெரிவித்துள்ளார்.

# உக்காத கழிவுகளைக் கொட்டுவதற்கு வலிமேற்கில் நான்கு இடங்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு சங்காணை பிரதேசத்தில் உள்ளவர்கள் உக்காத கழிவுப் பொருட்களைக் கொட்டுவதற்கான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் குறித்த இடங்களில் மட்டுமே உக்காத கழிவுப்பொருட்களைக் கொட்டுமாறு சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையினரும் பிரதேச சபையினரும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மக்கள் உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் என வேறு படுத்தாது அனைத்தையும் வீதி ஓரமாகக் கொட்டிவந்தனர்.

இதனால் பிரதேசசபையினர் கழிவுகளைப் பிரித்தறிவதிலும், அவற்றை அகற்றுவதிலும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு பொது சுகாதரா பரிசோதகர்கள், பிரதேசசபையினர் பொதுமக்கள் எனப் பலரும் இணைந்து சங்கானையில் 4 இடங்களை உக்காத கழிவுகள் கொட்டுவதற்கு என தெரிவு செய்துள்ளனர்.

அந்த இடங்களில் சேரும் கழிவுகளை பிரதேச சபையினர் கிரமமான முறையில் அகற்றுவார்கள். தெரிவு செய்யப்பட்ட இடங்களாவன: சங்கானை மத்தியில் உள்ளவர்கள் விளாவெளி மயானத்துக்கு அண்மையாக உள்ள காணியிலும், சங்கானை கிழக்கில் உள்ளவர்கள் கபண்டா வைரவர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள காணியிலும், சங்கானை மேற்கிலுள்ளவர்கள் மாளிகாவத்தை மைதானத்துக்கு அண்மையில் உள்ள காணியிலும் சங்கானை தெற்கில் உள்ளவர்கள் சலோசியார் தேவாலயத்திற்கு அருகில் உள்ள காணியிலும் உக்காத குப்பைகளைக் கொட்டலாம் என கூறப்பட்டுள்ளது. (கா)

# இயல்பு வாழ்விற்குத் திரும்புகின்ற மீள்குடியமர்ந்த கொக்கிளாய் மக்கள்



(கொக்கிளாய்)

இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு மீளவும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட கொக்கிளாய் மக்கள், மீளவும் தமது வாழ்க்கையை இயல்பு நிலைக்கு இட்டுச் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தமது நிரந்தர காணிகளிலுள்ள பற்றைகளைத் துப்பரவாக்கி கொட்டகைகளை அமைத்து வருகின்றனர். விவசாயச் செய்கைகளில் ஈடுபடுவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை கடலை நம்பி வாழ்க்கையை நடாத்திய இந்த மக்களில் சிலர் தமது கடற்றொழிலை ஆரம்பித்துள்ளதனையும் காணமுடிகின்றது. கரை வலைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அதில் மிகுந்த ஆர்வத்துடனும் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை இறால் பிடித்தல் தொழிலும் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

நண்டு பிடித்தலும் இவர்களின் வாழ்க்கைக்கு நாளாந்தம் உதவி வருவதனையும் காணமுடிகின்றது. பிடிக்கப்படும் மீன் வளத்தைத் தமது தேவைக்குப் பயன்படுத்துவதுடன் மிகுதியானவற்றை பிறஇடங்களான விசுவமடு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கும் அனுப்பி வருகின்றனர். (17)

# காலாவதியான பொருள் வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் பொது சுகாதார பரிசோதகர் குழுவினர் திடீர் பரிசோதனை நடத்தியுள்ளனர்.

சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர், சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் சுழிபுரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களைப் பரிசோதித்தனர். இதன் போது ஒரு வர்த்தக நிலையத்தில் காலாவதியான பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

பொதுச் சுகாதார பரிசோதகரால் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (கா)

# போர்க்குற்ற விசாரணையைத் தவிர்க்கவே பிளேக்கை சந்திப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு

## மேற்குலக ராஜதந்திரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்தவாரம் கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க முனைந்ததாகவும், ஆனால் அதற்கு ஜனாதிபதி செயலகம் இடம்கொடுக்கவில்லை என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதியுடன் பிளேக் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிளேக்கைச் சந்திக்க முடியாதுள்ளதற்கு வருந்துவதாக ஜனாதிபதி செயலகம் தகவல் அனுப்பியது.

இதனால் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் பிளேக், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை மட்டுமே சந்தித்தார்.

அதேவேளை, போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா நம்பகமாக அனைத்துலக விசாரணையைக் கோரும் என்று கொழும்பு நம்பியதால் தான் ஜனாதிபதி பிளேக்கைச் சந்திக்கவில்லை என்றும், ஐ.நா அறிக்கை தொடர்பான நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள விரும்பாததால் தான் மகிந்த ராஜபக்ஷ பிளேக்கை சந்திக்க தயங்கினார் என்றும் மேற்குலக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை கொழும்பு வந்த பிளேக் இலங்கை வெளிவிவிகார அமைச்சர் பீரிசிடம் ஒபாமா நிர்வாகத்தின் இரண்டு செய்திகளைக் கூறியுள்ளார்.

முதலாவது, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரம் தொடர்பாக உள்நாட்டில் நம்பகமான விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அமெரிக்கா அனைத்துலக விசாரணைகளைக் கோரும்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவானது நம்பகமான உள்ளக விசாரணைக்கான ஒரு பொருத்தமான பொறிமுறை அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தி அரசியல்தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாடகவிழாவிற்கு விண்ணப்பங்கோரல்

(சாவகச்சேரி)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகத்தின் தேசிய நடன நாட்டிய நாடக பொம்மலாட்ட சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2011ஆம் ஆண்டுக்கான அரச நாட்டிய நாடக விழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சி பிரதேச கலைஞர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி பிரதேச கலாசார பிரிவினருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி ஆ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (11)

# இலங்கைக்கு தண்டனை வழங்குமாறு அரச சார்பற்ற நிறுவனம் அறிக்கை

## என்கிறது திவயின

(கொழும்பு)

இலங்கைக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென கொழும்பிலிருந்து அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் இலங்கைக்கு எதிரான வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டிய முறைமைகள் தொடர்பில் 28 பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இரகசியமான முறையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும், இலங்கைக்கு ஆதரவளிக்கும் தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஆசிரிய மாணவர்களுக்கான மேற்பார்வை பயிற்சிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறியைத் தொடர்கின்ற இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டை மேற்பார்வை செய்யும் பயிற்சி வகுப்பு இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி கற்கைநெறியைத் தொடர்கின்ற வன்னி போன்ற வெளிமாவட்டங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் மேற்பார்வை பயிற்சித்திட்டம் யாழ்.மாவட்டத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கான செயல்வழி ஆய்வுக்கான வழிப் படுத்தல்களும் நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை முதலாம் வருடம் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகள் இக் கற்கை நெறியினைத் தொடரும் நிலையிலும் வெளியிடப்படாமை குறித்து மாணவர்கள் கவலை தெரிவித்தனர். (17)



கிளிநொச்சி மாவட்டத்தில் 61 வருடங்கள் பழைமைவாய்ந்த உருத்திரபுரம் மகாவித்தியாலயம் போதிய கட்டட வசதிகள் இன்றி மரங்களின் கீழ் வகுப்பறைகள் நடத்தப்படுகின்றன. இப்பாடசாலையில் க.பொ.த உயர்தரம் வரை வகுப்புக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# கிளிநொச்சி நகரம் அபிவிருத்தி
## மூவாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக அரசாங்கம் மூவாயிரம் கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்றையதினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில் இம்மாவட்டத்தில் நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, வீடமைப்பு ஆகிய உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் கிளிநொச்சி மாவட்டத்தை விரைவில் அபிவிருத்தி அடையச்செய்து அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடடையச் செய்வதே அரசின் நோக்கமாகும் என அவர் இதன்போது தெரிவித்தார். (29)

# அரசை நல்வழிப்படுத்தவே எதிர்கட்சி
## பிரதி அமைச்சர் ரோஹித கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிழைகளை சுட்டிக்காட்டி அரசாங்கத்தை சரியான வழியில் இட்டுச் செல்வதே எதிர்கட்சியின் பிரதான கடமையாக இருக்க வேண்டுமென துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று நடை பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் எதிர்கட்சி ஆதரவளிக்க வேண்டுமெனவும் எதிர்கட்சியில் உள்ள சிலர் ஒசாமா பின்லேடனின் கொலை குறித்து புகழ்பாடுவதாகவும், இந்த நாட்டில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டபோது அவர்கள் வாயடைத்து இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விரிவுரையாளர் போராட்டம்
## ஜே.வி.பி. கைகோர்க்கிறது

(கொழும்பு)

சம்பள உயர்வு கோரி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அரசாங்கம் 2007 ஆம் ஆண்டில் அறிவித்திருந்த போதும் இதுவரை வழங்கப்படாது பேச்சுக்கு மட்டுமட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ரில்வின் சில்வா இக்கருத்துக்களை வெளியிட்டார். பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானது எனவும் அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமெனவும் ரில்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

தெற்காசிய வலயத்தில் இலங்கையிலேயே பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுவதாக கூறிய ரில்வின் சில்வா, கனிஷ்ட விரிவுரையாளர்களுக்கு 20750 ரூபாவும் சிரேஷ்ட பேராசிரியர்களுக்கு 57750 ரூபா சம்பளமும் வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

# இராணுவ ஆட்சிப் பண்புகள் நாட்டில் தலைதூக்குகின்றன
## ஐ.தே.கட்சி அரசு மீது சீற்றம்

(கொழும்பு)

நகர அபிவிருத்தி உள்ளிட்ட பொதுவாழ்வில் அனைத்து அம் சங்களையும் இலங்கை அரசாங்கம் இராணுவ மயப்படுத்தி வருவதாக நாட்டினது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க குற்றம் சுமத்தியிருக்கிறது.

மாநகரசபைத் தேர்தல் இடம் பெறுவதற்கு ஓரிரு வாரங்களின் முன்னர் மாத்தறையினது நகர அபிவிருத்தியில் பாதுகாப்பு அமைச்சு மூக்கினை நுழைப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பி.பி.சி இன் சிங்கள சேவையான சந்தேசியவிடம் கூறியிருக்கிறார்." ஒரு நகரத்தினை அபிவிருத்தி செய்வதற்கு இராணுவத்தினைப் பயன்படுத்தவேண்டிய தேவை எதுவுமில்லை. அரசாட் சியின் சிவில் பொறுப்புக்களை இராணுவம் தனதாக்குவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்கிறார் சமரவீர.

தற்போது நடைமுறையிலிருக்கும் நகர அபிவிருத்திச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு நகரத்தினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் சிவில் நிர்வாக அலகுகள் கொண்டிருக்கின்றன என முன்னாள் நகர அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர கூறுகிறார்.

"இன்று மாத்தறை நகரத்தில் இராணுவ ஆட்சிப் பண்புகள் தலை தூக்குவதை நாங்கள் காண்கிறோம். இது மிகவும் ஆபத்தானதொரு போக்கு. உலக வரலாற்றில் இத்தகைய போக்குத்தான் ஈற்றில் அந்த நாடு இராணுவ ஆட்சி நிலவுகின்ற நாடாக மாறுவதற்கு வழி செய்திருக்கிறது" என ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தப் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தார்.

ஆனால் மேற்குறித்த இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கிறர் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் மடவெல" நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகளில் இராணுவம் ஒரு போதும் தலை யிடவில்லை" என அவர் சந்தேசியவிடம் கூறியிருந்தார்.

எவ்வாறிருப்பினும் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த பின்னர் நகர அபிவிருத்தித்திட்டங்களில் இராணுவத்தினர் பங்கெடுத்து வருகிறார்கள் என்பதை இராணுவப் பேச் சாளர் ஏற்றுக்கொள்கிறார்" சிவில் அதிகாரிகளுக்கான இராணுவத்தின் உதவிகள், பொதுமக்களுக்கான படை உதவிகள் என்பன இராணுவத்தினரின் அங்கமாகி விட்டது" என்றார் அவர்.

## கொழும்பு வருகிறது...

செயலாளர் பிரதீப்குமார் ஆகியோர் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்வரும் 16 ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், இந்தியாவின் உயர் மட்டக் குழு கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட கொழும்பின் உயர்மட்ட அதிகாரிகள் பலருடன் இந்திய உயர்மட்டக் குழு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்திய உயர் மட்டக் குழு கொழும்புக்கு அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த போது நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து கொழும்பிடம் வலியுறுத்தி இருந்தார்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்திய உயரதிகாரிகளைச் சந்திக்க முற்பட்டபோது, எதிர்வரும் ஜுன் மாதத்துக்கு முன்னர் அவர்களைச் சந்திக்க நேரமில்லை என புதுடில்லி தெரிவித்திருந்தது.

இந் நிலையில், நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவின் உயர்மட்டக் குழு திடீரென கொழும்புக்கு விஜயம் செய்கின்றமை முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கர்களால் கருதப்படுகின்றது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையில் புதுடில்லி குழுவொன்றை நியமித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## வலி.வடக்கில்...

ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/228 தெல்லிப்பளை, ஜே/230 தந்தை செல்வாபுரம், ஜே/231 மாவிட்டபுரம், ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு, ஜே/236 பளை வீமன்காமம் வடக்கு, ஜே/237 பளை வீமன்காமம் தெற்கு, ஜே/241 வறுத்தலைவிளான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

## கூட்டமைப்பு மீது...

தமிழ்த் தேசியம் பேசிய இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளைச் சேர்ந்த தமிழ்த் தலைவர்கள் எனக் கூறப்படும் அரசியலவாதிகளே தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டி, தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்துக்குத் தள்ளியவர்கள். இவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உல்லாசமாக வாழ்ந்து வருகின்றனர். ஆயுதப் போராட்டத்துக்குக் காரணமானவர்கள் இவர்களே.

அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே தருஸ்மன் அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கிறது. உலக நாடுகளிலுள்ள சிலருடன் இணைந்து நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கே அவர்கள் முயற்சிக்கின்றனர். ரொபேர்ட் ஓ பிளேக் மற்றும் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் நீண்டகாலத் திட்டமொன்றை அடிபபடையாகக் கொண்டு நடத்தப்படுவதில்லை. பிரச்சினையொன்றைக் கிளப்பிவிடும் நோக்கிலேயே கூட்டமைப்பு இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறது.

கடந்த 30 வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் பேசிய அரசியல் தலைவர்களுக்கு வாக்களித்து தமிழ் மக்கள் எந்தப் பலனையும் அடையவில்லை. நாட்டின் அபிவிருத்தி பற்றியோ, நாட்டின் பொருளாதார மேம்பாடு பற்றியோ பேசினால் அரசியல் நடத்த முடியாது என்பதால் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர் காயும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டுவருகிறது.

1989 ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மத்திய குழு உறுப்பினராகவிருந்த தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா உடன்படிக்கைக்கு எதிராக சிறுவர்களைப் பலவந்தமாகத் தமது அமைப்புக்குள் இணைத்தவர். இவ்வாறானவரே மனித உரிமை மீறல்கள் பற்றிக் கதைப்பதுடன், மனித உரிமை மீறல்களுக்கு எதிரான அறிக்கைக்கு ஆதரவாக தற்பொழுது குரல்கொடுத்து வருகிறார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் அப்பாவித் தமிழ் மக்கள் வடக்கு-கிழக்கில் அமைதியாக வாழ்கின்றனர். அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசும் பொதுநல ஸ்தாபனங்களும் பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டுவரும் இந்தச் சூழ்நிலையில், அவர்களை மீண்டும் படுகுழிக்குள் தள்ளும் வகையிலான செயற்பாடுகளை கூட்டமைப்பு மேற்கொளகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ் இனத்தை ஆண்டுகொண்டிருந்த பயங்கரவாதத்துக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் தமிழ்த் கூட்டமைப்பே தீனிபோட்டது.

மேடைகளில் வீரவசனங்களைப் பேசியும், அறிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் இரத்தத்தை சூடாக்கியும் தமது இருப்பைப் பாதுகாத்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிக் க்கட்சிகள் பின்னர் புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களுடன் சேர்ந்து-தமிழ் கூட்டமைப்பாக மாறி புலிக்கு பக்க வாத்தியம் இசைத்து வந்ததே வரலாறு.

இன்று தமிழினத்தின் அத்தனை அழிவுகளுக்கும் இவர்களே வகைசொல்லியாக வேண்டும். இதுவரை தமிழ் இனத்தை ஏமாற்றிவந்த இவர்கள், புலிகளின் அழிவுக்குப் பின்னராவது திருந்தியிருக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்களின் பக்கபலத்துடனும் தூண்டுதலுடனும் தயாரிக்கப்பட்ட தருஸ்மனின் அறிக்கையை இவர்கள் வரவேற்று அறிக்கை விட்டிருப்பதே அவர்களின் அரைவேக்காட்டுத்தனத்துக்கு சான்று.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சேறுபூச வேண்டும், இந்நாட்டு அமைதியைக் குலைத்து தமது ஏகாதிபத்திய கால்களை இங்கே பதியச் செய்து நாட்டை ஆட்டிப் படைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிவரும் மேற்கத்தேய உலகின் சதி முயற்சிகளுக்கு இந்த நாட்டில் பிறந்தவர்கள் ஒருபோதும் ஒத்துழைக்க மாட்டார்கள். வடக்கு, கிழக்கில் பிறந்த அப்பாவித் தமிழ் மக்களைச் சதி வலைக்குள் சிக்க வைக்க கூட்டமைப்பு முயற்சி எடுத்துவருகின்றது எனத் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படைக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சாம் தம்பிமுத்துவின் புதல்வரே அருண் தம்பிமுத்து என்பது குறிப்பிடத்தக்கது. சாம் தம்பிமுத்துவும் அவரது மனைவியும் கொழும்பில் வைத்து இக்காலப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

## ஆள்கடத்தல் சூத்திரதாரி கைது

சட்டவிரோதமான முறையில் ஆள்கடத்தலில் ஈடுபட்டு வந்த நபரொருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட பொலிஸ் புலனாய்வுக் குழுவொன்றுக்குக் கிடைத்த ஆதாரபூர்வமான தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்


இந்த கடத்தல்கள் மூலம் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு புலிகள் அமைப்பினருக்கு உயிரூட்ட முற்பட்டார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த நபர் வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தப்பிவந்த புலி உறுப்பினர்களை பாதுகாப்புப் படையினரின் கையில் சிக்கவிடாமல் பாதுகாப்பளித்திருப்பது மாத்திரமன்றி, அவர்களை மீன்பிடி வள்ளங்கள் மூலமாக திருட்டுத்தனமான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களை சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்த இவர், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் புலிகள் அமைப்புக்கு உயிரூட்ட முயன்றதாகவும் விசாரணைகளின் போது ஒப்புக் கொண்டுள்ளார்.

இவரிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து குற்றப் புலனாய்வு பொலிஸார் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், அவருக்கு எதிராக மூன்றுமாத கால தடுப்புக்காவல் உத்தரவு வழங்கியுள்ளது.

## யாழ்.நகரில் போக்குவரத்து நெரிசல்; அமைச்சர் தலைமையில் மாநாடு





(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் வாகன நெரிசல்களால் ஏற்பட்டுவரும் இடர்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். நகரப் பகுதியிலுள்ள வாகன நெரிசல்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் தென்பகுதி உள்ளிட்ட தூர இடங்களிலிருந்து வரும் பேருந்துகள் பண்ணையில் அமைந்துள்ள தரிப்பிடத்தில் தரித்து நிற்க வேண்டுமெனவும், நகரத்தின் முக்கிய வீதிகளில் பொருட்களை நாள் தோறும் மாலை 6 மணிக்கு பிறகு ஏற்றி இறக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, அரச மற்றும் தனியார் பேருந்துகளின் போக்குவரத்து சேவைகள் தொடர்பாகவும் அதனால், பொதுமக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், எல்லோருடைய அபிப்பிராயத்தையும் பெற்றுக்கொண்டு இதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்த முடிவாக அமையும் எனவும், முக்கியமாக நகரத்தில் ஏற்பட்டுவரும் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்காகவே இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு ஏற்படும் சாதக, பாதக நிலைகளை ஆராய்ந்ததுடன், அரச மற்றும் தனியார் பேருந்துகளின் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## மீண்டும் சூடு பிடிக்கிறது! விரிவுரையாளர் போராட்டம்

(கொழும்பு)

சம்பள உயர்வு கோரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் சூடு பிடித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக பல்கலைக்கழக நிர்வாகப் பதவிகளில் இருந்து விலகப் போவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. தற்சமயம், தமது சங்கத்தின் உறுப்பினர்களில் 90 சதவீதமானோர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பதவி விலகல் கடிதங்களை கையளித்துள்ளதாக அதன் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுயவிருப்பத்துடன் பதவிகளில் இருந்து விலகுவார்களாயின் அது குறித்து 3 மாதங்களுக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், அது போன்ற சுற்றுநிருபங்கள் வெளியிடப்படுவது சட்டரீதியற்ற செயற்பாடு என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் எதிர் வரும் நாட்களில் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவிக்கையில், சுற்றுநிருபம் வெளியிடப்படுவதை தீர்மானிக்க வேண்டியது விரிவுரையாளர்கள் தொழிற்சங்கம் அல்ல எனவும், தமது ஆணைக்குழுவே அதனைத் தீர்மானிக்கும் எனவும் குறித்த சுற்றுநிருபம் சட்ட மூலத்தின் சரத்திற்கு அமையவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும். அது சட்டரீதியானதா, இல்லையா என்பது குறித்து தமது ஆணைக் குழுவே தீர்மானிக்கும் என அவர் தெரிவித்தார்.

1978 ஆண்டு 16 ஆம் இலக்க சட்டமூலத்தில் பதவிவிலகலுக்கான கால அவகாசம் குறித்த விடயம் உள்வாங்கப்படவில்லை. எனவே தற்போது அதனை குறிப்பிட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைக் கல்விக்கு முழுக்கு; இலங்கையில் மிக அதிகம்

நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் சிறார்கள் பள்ளிக்கூட படிப்பை இடை நிறுத்துவதாக சிறார் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை அதிகாரசபை தெரிவித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் 10 முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த மகளிர் மற்றும் சிறார் நலத்துறை இணையமைச்சரான ஹிஸ்புல்லா, இந்தப் பாதிப்பு வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் ஊவா மாகாணங்களில் அதிகம் காணப்படுவதாகவும், யுத்தம், வறுமை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் அத்தகைய சம்பவங்கள் நிகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலைமையை மாற்றுவதற்காக யுனிசெப் அமைப்போடு இணைந்து செயற் திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது இங்கிருக்கும் அவர்களின் குழந்தைகளுக்கு சரியான கவனிப்பும் மற்றும் பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலை காணப்படுவதாகவும், இவ்வாறான சூழ்நிலையில் தமது அமைச்சகத்துக்கு அறிவித்தால் தங்கள் அலுவலர்கள் குழந்தைகளின் நலனை உறுதி செய்ய நடவடிக்கையை மேற் கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இனங்களுக்கிடையிலான...

வலியுறுத்தியுள்ளது. இத்தகையதொரு செயன்முறை யையே பிரித்தானியா விரும்புவதாக பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பொதுச் சபையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தபோது அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சரும், பிரதி வெளிவிவகார அமைச்சரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பான பிரித்தானியாவின் நிலைப்பாடு மற்றும் பொதுநலவாய நாடுகளில் ஒன்றான இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பில் பிரித்தானியாவின் நிலைப்பாடு குறித்து அந் நாட்டின் நாடாளுமன்றத்தின் பொதுச் சபையில் கடந்த 3 ஆம் திகதி லிபரல் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் ஹியுஸ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இவரது கேள்விகளுக்குப் பதிலளித்த பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக், இவ்வறிக்கை குறித்த இலங்கை அரசாங்கத்தின் கருத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அவர்களின் பதில் கொழும்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் எனவும் கூறியிருந்தார்.

அதேவேளை, பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பொதுச் சபையில் கடந்த 6 ஆம் திகதி அந் நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் கருத்துத் தெரிவிக்கையில், போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீனமான நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையே பிரித்தானியா விரும்புவதாக தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடவுள்ள அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான எமது நிலைப்பாட்டினையும் நாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அதே வேளை, உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் எதனைப் பரிந்துரைக்கப் போகின்றது என்பதை நாம் முற்கூட்டியே கூறிமுடியாது என்றும் தெரிவித்தனர்.

### அமைதியைக் குலைத்தால்...

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், வர்த்தகர்கள், தாம் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தளபதி ஹத்துருசிங்கவிடம் தெரிவித்தனர். மேற்படி அவர்கள் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டறிந்த தளபதி, இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

வர்த்தகர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாகத் தெரிவிக்க இயலாதவிடத்து, தனது கைத்தொலைபேசி இலக்கமான 0773833906, 0777863755 ஊடாகத் தொடர்பு கொள்ளலாமெனத் தெரிவித்தார்.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில், மேற்படி கலந்துரையாடலை ஒழுங்கு செய்த தளபதி ஹத்துரு சிங்கவிற்கு வர்த்தகர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தின் அமைதி மற்றும் அபிவிருத்தியைச் சீர்குலைக்க முனைபவர்களுக்கு எதிராக படைத்தரப்பினர் கடும் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கும், அமைதிக்கும் ஒத்துழைப்பு வழங்கப் படையினர் தயாராக உள்ளதாகவும், பொதுமக்களும், வர்த்தக சமூகத்தினரும் படையினருடன் மிகவும் சினேகபூர்வமாகப் பழக வேண்டும் எனவும் இச் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், யாழ். குடாநாட்டில் கப்பம் கோரும் நபர்களை அடையாளம் கண்டு கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு படைத்துறை அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனக்கு அறிவுரை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த மகிந்த ஹத்துருசிங்க, கப்பம் கோரல் சம்பவங்கள் குறித்து தனக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடு களை அடிப்படையாகக் கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இச்சந்திப்பில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். (கா)

### நாட்டின் நற்பெயருக்கு...

காரணம் என்பதை குறிப்பிட்டுக் காட்டும் அவர், ஒருசில முக்கிய விடயங்களின் போது வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் உண்மை நிலையை தெளிவுபடுத்துவதில் அசிரத்தையாக செயல்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றார்.

இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக்கூடிய பிரசாரங்களின் போது வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் அவற்றுக்குப் பதிலளிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டதுடன், சில வேளைகளில் அவ்வாறு வழங்கிய பதில்களும் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அவ்வாறான அசிரத்தையான நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கை இன்று ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு போன்ற அறிக்கைகளின் முன் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்திலும் இந்நிலை ஏற்படாதிருக்க வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் மற்றும் தந்திரோபாய வழி முறைகளை முற்றாக மாற்றியமைக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

### கைக்குண்டுத்...

இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் தமது வீட்டின் படலையைத் திறந்து விட்டு வீட்டுக்குள் செல்லும் போதே, மோட்டார் சைக்களில் வந்தோர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அச்சகன் அச்சகத்தில் 2011 மே 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

29) துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்வதற்கு முன் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய துவிச்சக்கர வண்டியின் பகுதி
1. முன்பக்கச் சில்லுத் தடைகள் 2. பின்பக்கச் சில்லுத் தடைகள்
3. மணி அடிக்கக் கூடியதாக இருத்தல் 4. ஆசனம்

30) கிரிக்கெட் விளையாட்டில் ஒரு குழுவில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 9 2. 11 3. 15 4. 16

31) தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம் யாது?
1. கறுப்பு 2. சிவப்பு 3. கபிலம் 4. நீலம்

32) எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
1. பறப்பதற்கு இயலுமாக இருத்தல் 2. உடலில் இறகு இருத்தல்
3. பழங்கள் மட்டும் உணவாகக் கொள்ளல்

33) எல்லா மாணவர்களுக்கும் பொதுவான இயல்பு எது?
1. தினமும் 5 மணித்தியாலங்கள் பாடம் தொடர்பான வேலையில் ஈடுபடுதல்
2. ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்
3. அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்

34) பழம் நழுவிப் பாலில் விழுதல் என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது?
1. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் குமரனுக்கு, தந்தை புத்தகம் சிலவற்றைப் பரிசாகக் கொடுத்தல்
2. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் நிசாருக்கு பந்தொன்றும் துடுப்பொன்றும் பரிசாக வழங்குதல்
3. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் அந்தோனிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்குத் தடை விதித்தல்

35) வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினையறுப்பான். இக்கூற்றுக்குப் பொருத்தமான நிகழ்ச்சி யாது?
1. பாடசாலை முடிவடைந்து வீடு செல்லும் ரமணனின் காலில் காயம் ஏற்படுதல்
2. அநாதரவான பிச்சைக்காரனைக் கேலி செய்த கோபி கால் சறுக்கிக் கீழே விழுதல்
3. பாடசாலைக்கு வரும் வழியில் நிசாந்தன் நண்பன் ஒருவனோடு சண்டையிடுதல்

36) நாம் விலங்குகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆடைவகை எது?
1. பருத்தி 2. பட்டுத்துணி 3. நைலோன்துணி 4. டெரின் ஆடை

37) மண்ணினுள் புதைக்கும்போது மிக நீண்ட காலம் பிரிகையடையாதது. சூழலை மாசடையச் செய்யும் பதார்த்தம் எது?
1. விலங்குக் கழிவு 2. பிளாஸ்ரிக்கு 3. கண்ணாடி 4. பருத்தி இழை

38) பாடசாலையொன்றின் அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடிய அம்சங்கள் அல்லாதவை எவை?
1. பாடசாலைக் கொடியும் பாடசாலைக் கீதமும்
2. பாடசாலை மகுட வாசகமும், பாடசாலைக் கழுத்துப் பட்டியும்
3. பாடசாலைக் கீதமும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலும்
4. பாடசாலைக் கொடியும் பாடசாலைச் சின்னமும்

39) பாதையொன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 8 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
1. 5 நாட்கள் 2. 10 நாட்கள் 3. 20 நாட்கள்

40) ஒரு ஆற்றின் நீர் மணிக்கு 4 கிலோமீற்றர் வேகத்தில் பாய்கிறது. மனிதனொருவன் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்று நீரோட்டத்துக்கு எதிராக வள்ளம் ஒன்றைச் செலுத்துகிறான். அவன் செல்கின்ற உண்மையான வேகத்தை மணிக்கு எத்தனை கிலோமீற்றர் எனக் காண்க.
1. 8 2. 5 3. 2






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 13

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.




தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




01) உருக்களுக்கு இடையிலான தொடர்பைச் சரியாகக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

01) AG, DF, BE, CH
02) AD, BC, FG, EH
03) AG, BE, CF, DH


**பின்வரும் விலைப்பட்டியலை வாசித்து விடைதருக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| A – சீனி | ஒரு கிலோ கிராம் | 52.00 |
| B – பருப்பு | 500 கிராம் | 45.00 |
| C – தேயிலை | 250 கிராம் | 100.00 |
| D – கடலை | ஒரு கிலோ கிராம் | 78.00 |
| E – மாசி | 100 கிராம் | 45.00 |

02) பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடை எது?
1. ABDCE 2. ECBDA 3. ECDBA

03) விலைப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு பொருளையும், ஒரு கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்?
1. ரூ. 968.00 2. ரூ.1031.00 3. ரூ.1070.00

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 6ஆம், 7ஆம், 8 ஆம் வினாக்களுக்கு விடைதருக.**




04) ஒரு பென்சிலின் விலை எவ்வளவு?
1. ரூ.10.00 2. ரூ.15.00 3. ரூ.20.00 4. ரூ.25.00

05) ஒரு பேனாவின் விலை எவ்வளவு?
1. ரூ.10.00 2. ரூ.15.00 3. ரூ.20.00 4. ரூ.25.00

06) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?
1. ரூ.110.00 2. ரூ.120.00 3. ரூ.130.00 4. ரூ.140.00

**பின்வரும் உருக்களில் பொருத்தமற்ற உருக்களின் கீழ்க் கோடிடுக.**

07) 

08) 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனில், அவ்வருடத்தில் மார்ச் மாதம் 1ஆம் திகதி என்ன கிழமை?

1. வெள்ளி  2. சனி  3. ஞாயிறு  4. திங்கள்

09) வரண்ட காலங்களில் அதிகதாகம் ஏற்படும். ஒருவனுக்கு அதிகதாகம் ஏற்படுகின்றது எனில்,

1. வரண்ட காலமாக இருக்கும்  2. நீரிழிவு நோயாக இருக்கலாம்
3. எதுவும் உறுதியாகக் கூறமுடியாது

10) பாடசாலையில் நிதமும் இருப்பவை

1. ஆசிரியர், மாணவர்கள்  2. கட்டடம், தளபாடம்  3. அதிபர், ஆசிரியர்

11) பசியால் வாடிய நரியொன்று திராட்சைத் தோட்டத்தினூடாகச் சென்றபோது, திராட்சைக் குலையைக் கண்டு பறித்துத் தின்ன முயற்சி செய்தது. இந்த வாக்கியத்திலுள்ள கருத்துப் பிழை யாது?

1. நரி திராட்சைத் தோட்டத்திற்குச் செல்வதில்லை  2. நரி ஒரு போதும் திராட்சைப் பழம் உண்பதில்லை
3. நரிக்குப் பசி ஏற்படுவதில்லை

12) குமரனின் ஒரே தங்கையான மாலதி தனது தங்கையுடன் கடைத்தெருவுக்குப் போனதாகக் கூறினாள். இக்கூற்று உண்மையாகவும் இருக்கலாம். இதற்குச் சரியான விளக்கம் யாது?

1. குமரனுக்கு மாலதி தவிர இன்னொரு தங்கையுண்டு
2. குமரனின் பெரியம்மாவின் சிறிய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை
3. குமரனின் மாமாவின் இளைய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை

**13ஆம் 14ஆம் வினாக்களிலே தொடக்கத்திலே தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.**


13) தமிழ், சிங்களப் புத்தாண்டு ஏப்ரல் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் பிறக்கும்

1. இது பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்  2. இது எப்போதும் உண்மையாகும்
3. இது சில வேளை நிகழும் நிகழ்வாகும்


14) காலை வேளையில் ஒரு கிழக்கு நோக்கி நடந்து சென்றால், அவரது நிழல் அவரைப் பின் தொடர்ந்து வரும்

1. இது பெரும்பாலும் உண்மையாகும்  2. இது எப்போதும் உண்மையாகும்
3. இது ஒருபோதும் உண்மையானதன்று

**15ஆம், 16ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலத்திற்கு அமைய, வெற்றிடத்தினுள் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்து இடுக.**

15) 


1. 8  2. 9  3. 10

16) 


1. 30  2. 20  3. 10





**ஒரு விற்பனை நிலையத்தில் பொருட்களுக்கான விலைகள் பின்வருமாறு இரகசியக் குறியீட்டின் அடிப்படையில் எழுதப்பட்டது. இதனைப் பயன்படுத்தி 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| W | H | I | T | E | B | O | A | R | D |
| 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |


17) பொம்மைக்காரரின் விலை ரூ.1845 என்பதை இரகசியக் குறியீட்டில் எழுதுக.

......................................................................

18) கணிதச் செய்கையொன்றில் பெருக்கல் @ என்ற அடையாளத்தாலும், வகுத்தல் # என்ற அடையாளத்தாலும் குறிப்பிடப்பட்டிருப்பின் 12 @ 5 # 3 என்பதன் பெறுமதி எவ்வளவு?

......................................................................

**ஒரு தோட்டத்திலுள்ள மரங்களின் எண்ணிகையைக் காட்டும் வட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 19ஆம், 20ஆம், 21ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**




19) தோட்டத்திலே எத்தனை வீதம் தென்னை மரங்கள் உண்டு?

......................................................

20) தோட்டத்திலுள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 600 எனில் மா மரங்களின் எண்ணிக்கை யாது?

......................................................

21) தோட்டத்தில் சம எண்ணிக்கையில் காணப்படும் மரங்கள் எவை?

......................................................


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

22) வயலில் சூடு அடிக்கும் களத்தில் "குல்லம்" என அழைக்கப்படுவது

1. சுளகு  2. அரிவாள்  3. வைக்கோல்  4. பாய்

23) நாய் கடித்தால் உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி

1. காயத்தைத் துணியினால் கட்டுதல்  2. காயத்தை சவர்க்காரத்தினால் கழுவுதல்
3. காயத்தின் மீது தேங்காய் எண்ணெய் பூசுதல்  4. தேங்காய்ப் பாலைக் குடிக்கக் கொடுத்தல்

24) 

மேலே காட்டப்பட்டுள்ள நட்சத்திரக் கோலத்தைக் குறிக்கும் பெயர் யாது?

1. வேட்டைக்காரன்  2. கலப்பை
3. தேள்  4. பெருநாய்

25) உடற்பயிற்சி செய்வதற்கு முன்னர் உடலை இளஞ்சூடாக்க உகந்த செயற்பாடு

1. மெதுவாக நடத்தல் ஆகும்  2. ஒரே இடத்தில் நடத்தல் ஆகும்
3. ஒற்றைக்காலில் நிற்றல் ஆகும்  4. ஆழமாக உட்சுவாசித்து வெளிச்சுவாசித்தல் ஆகும

26) கறி சமைக்கும்போது எலுமிச்சம் புளி சேர்ப்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்

1. அடுப்பில் வைப்பதற்கு முன்பு  2. அடுப்பில் கறி இருக்கும்போது
3. அடுப்பிலிருந்து இறக்கியவுடன்  4. அடுப்பிலிருந்து இறக்கி கறி ஆறியபின்

27) இலங்கையின் அரச இலட்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்

1. நிறைகலசம், நெற்கதிர், தர்மசக்கரம்  2. நிறைகலசம், நெற்கதிர், அரசம் இலைகள்
3. சூரிய சந்திரன், தர்ம சக்கரம், அரசம் இலைகள்  4. சூரிய சந்திரன், நெற்கதிர், சங்கு

28) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த அரசன் யார்?

1. துட்டகைமுனு  2. மகாசேனன்  3. தாதுசேனன்  4. பராக்கிரமபாகு